Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

வெள்ளிக்கிழமை ஏப்ரல் 02, 2021 | ஒளி: 06 கதிர் 236 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE




ஒமிக்ரோனுக்கு எதிராக

## தடுப்பூசி மூலம் வழங்கும் பாதுகாப்பு குறைவு

### இலங்கை மருத்துவ சங்கம் தெரிவிப்பு

புதிய கொரோனா மாறுபாடான ஒமிக்ரோனுக்கு எதிராக தடுப்பூசி மூலம் வழங்கப்படும் பாதுகாப்பு மிகவும் குறைவு என, இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்தது.

அச்சங்கத்தின் தலைவர் டொக்டர் பத்மா குணரத்ன, நேற்றையதினம் (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒமிக்ரோன் மாறுபாடு இலங்கைக்குள் நுழையும் அபாயம் இருப்பதால், வெளிநாடுகளில் இருந்து வரும் அனைவருக்கும் பீசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறினார்.

தொடர்ச்சி P2

விமான நிலையத்தினூடு

# ஒமிக்ரான் நுழையும் ஓட்டைகள் குறைப்பு



### நாட்டுக்குள் நுழைந்திருக்கலாம் என்கிறது சுகாதார அமைச்சு

தென்ஆபிரிக்காவில் இனங்காணப்பட்ட கொரோனா வைரஸின் ஒமிக்ரோன் மாறுபாடு, விமான நிலையத்தின் மூலம் நுழையக்கூடிய ஓட்டைகள் குறைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு, நேற்று (02) தெரிவித்தது.

இலங்கைக்குள் நுழைந்து அழிவை ஏற்படுத்தக்கூடும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா நோயாளி ஒருவர் நாட்டுக்குள் நுழையாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக விமான நிலையங்களில் பலவிதமான பாதுகாப்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இந்தியாவுக்குள் புகுந்தது ஒமிக்ரான்

ஒமிக்ரான் மாறுபாட்டின் இரண்டு கொவிட்-19 நோயாளிகள் இந்தியாவில் கண்டறியப்பட்டுள்ளனர் என்று இந்திய சுகாதார அமைச்சகம் நேற்று (02) தெரிவித்துள்ளது.

இரண்டு தொற்றாளர்களும் கர்நாடகா மாநிலத்தை சேர்ந்தவர்கள். அவ்விருவரும் 66 மற்றும் 46 வயதுடையவர்கள் என சுகாதார அமைச்சகத்தின் இணைச் செயலாளர் லாவ் அகர்வால் செய்தி மாநாட்டில் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வடக்கில் மின் உற்பத்தியை சீனா அதிரடியாக கைவிட்டது

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் கலப்பு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்பு உருவாக்கும் திட்டத்தை நிறுத்தி வைக்க சீனா முடிவு செய்துள்ளது.

கொழும்பிலுள்ள சீனத் தூதரகம், நேற்று (02) வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவுகளிலுள்ள 12 தீவுகளில் சூரிய மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்கு நவம்பர் 29ஆம் அன்று மாலைதீவுகள் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்த மூன்றாம் தரப்பினரின் 'பாதுகாப்புக் கவலை' காரணமாக இந்த இடைநீக்கம் ஏற்பட்டதாக கொழும்பில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## வழக்கில் இருந்து அசாத் சாலி விடுதலை



இனங்களுக்கிடையில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்தும் வகையில் கருத்துகளை தெரிவித்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், பயங்கரவாத தடுப்புச் சட்டம் மற்றும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தின் கீழ், அதி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்த மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, வழக்கிலிருந்து முழுமையாக விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## நான் ஒரு ஆசிரியர் செய்தியாளர் இல்லை

### ஊடகவியலாளர்களிடம் பிரதமர் தெரிவிப்பு



கட்சிக்கோ, தமக்கோ எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாத திருத்தப்பட்ட செய்திகளை மட்டுமே தாம் ஊடகங்களுக்கு வழங்கியதாகத் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தன்னைத் தான் ஆசிரியராகக் கருதுவதாகவும் செய்தியாளராகக் கருதவில்லை என்றும் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டங்கள் தொடர்பான தகவல்களை ஊடகங்களுடன் பகிர்ந்து கொண்டதால் முன்னாள் பெண் ஜனாதிபதி, தன்னை ஒரு செய்தியாளராக ஒப்பிட்டதாகவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அலரிமாளிகையில் நேற்று (02) இடம்பெற்ற ஊடகவியலாளர்களுக்கு காப்புறுதி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்குறித்த விடயங்களை பிரதமர் வெளியிட்டார்.

ஓர் அரசாங்கத்தை உருவாக்குவதற்கு ஊடகவியலாளர்கள்

தொடர்ச்சி P2

## கட்டணத்தை அதிகரிப்போம்



எமது நாட்டின் மொத்த உற்பத்தியில், இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கமானது, 12 சதவீத பங்களிப்பு வழங்கியுள்ளதாக தெரிவித்த தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, ஆனால் தற்போது நாட்டில் அனைத்து பொருட்களினதும் விலை அதிகரிப்புக்கு மத்தியில், விருப்பமில்லாவிடினும் பஸ் கட்டணங்களை அதிகரிக்க தீர்மானித்துள்ளோம் என்றார்.

தொடர்ச்சி P2

## அதிகரிக்க முடியாது



தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிப்பதானது, இந்த சந்தர்ப்பத்தில் முடியாதென போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.


ஜனவரி மாதத்திலிருந்து பஸ் கட்டணங்களை அதிகரிக்கவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் பதிலளிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

எரிவாயு வெடிப்பு தொடர்பில்

## வீடு வீடாக ஆராய்கிறது குழு

### நேற்றும் 10 வெடிப்புகள் பதிவு



அண்மைக்காலமாக இடம்பெறும், எரிவாயு சிலிண்டர்களுடன் தொடர்புடைய வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழு, சம்பவங்கள் பதிவாகிய வீடுகளை ஆய்வு செய்துவருகிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள வீடுகள்,

தொடர்ச்சி P2

## சஹ்ரானின் மனைவிக்கு எதிராக குற்றப்பத்திரம்

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிமின் மனைவியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவிற்கு எதிராக சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் குற்றப்பத்திரம் நேற்று (02) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


கல்முனை மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜே.ட்ரொக்ஸி முன்னிலையில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதிக்கும் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சாரா ஜஸ்மின் என்றழைக்கப்பட்ட புலஸ்தினி மகேந்திரன் என்பவர் வெடிபொருட்களை தயாரித்தமை மற்றும் அவற்றை சேகரித்து வைத்திருந்தமை தொடர்பில் அறிந்திருந்தும் ,

தொடர்ச்சி P2

ஹம்பாந்தோட்டை துறைமுகம்

## நாளையே திரும்பப் பெறலாம்



■ பா.நிரோஸ்

ஹம்பாந்தோட்டை துறைமுகம் விற்பனை செய்யப்படவில்லை. 70 வருட குத்தகைக்கே வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி, வேண்டுமாக இருந்தால் நாளையே ஒப்பந்தத்தை இரத்து செய்துவிட்டு துறைமுகத்தை மீளப் பெற்றுகொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய மக்கள்

தொடர்ச்சி P2

வாயை இலங்கைக்கு வழங்கிவிட்டு

## மடியை சீனாவுக்கு கொடுத்தார் ரணில்



■ பா.நிரோஸ்

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுவதைப்போல, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை 70 வருட குத்தகைக்கு வழங்கவில்லை என்று கூறிய துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, 99 வருடங்களுக்கு துறைமுகம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த ஒப்பந்தத்தை ரணிலே தயாரித்துள்ளார். துறைமுகத்தை இரு நிறுவனங்களாகப் பிரித்து அதில் ஒரு பகுதியை வழங்கியுள்ளார்.

தொடர்ச்சி P2

ராஜகிரிய விபத்து வழக்கு

## சம்பிக்கவுக்கு எதிரான அதிகுற்றப்பத்திரிகை வாசிப்பு



ராஜகிரிய விபத்து தொடர்பில் பொய்ச் சாட்சிகளை இட்டுக்கட்டினார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க உட்பட மூவருக்கு எதிரான அதி குற்றப்பத்திரம், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று (02) வாசிக்கப்பட்டது.

2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ராஜகிரிய பிரதேசத்தில் சம்பிக்க எம்.பி பயணித்த ஜீப், மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாது.

தொடர்ச்சி P2

## மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவது பொருத்தமானது



மட்டுப்படுத்தப்படும் வகையில் பழைய தேர்தல் முறையிலாவது மாகாணசபைத் தேர்தல்களை இம்முறை மாத்திரம் நடத்துவது பொருத்தமானது என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் நேற்று(02) பரிந்துரைத்தது.

தொடர்ச்சி P2

சமையலறையை பாதுகாக்காதவர்களால்

## தேசிய பாதுகாப்பை எவ்வாறு உறுதி செய்ய முடியும்?

■ பா.நிரோஸ்



சமையலறையின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாத அரசாங்கத்தால், தேசிய பாதுகாப்பை எவ்வாறு உறுதி செய்ய முடியும் என கேள்வி எழுப்பிய தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர்களில், 9.5 கிலோ கிராம் நிறை கொண்ட எரிவாயுவை நிரப்பியமையே, எரிவாயு வெடிப்புகளுக்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தடுப்பூசி மூலம் ...

ஒவ்வொரு தொற்றுநோய் சூழ்நிலையும் அவ்வப்போது நேரத்துக்கு நேரம் மாறிக்கொண்டே இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய மாறுபாடு, வைரஸின் முந்தைய மாறுபாடுகளைக் காட்டிலும் அதிகமாக பரவக்கூடியது என்றும், அது குறிப்பிட்ட அளவிலான நோய் எதிர்ப்பு சக்தியைக் கடந்து செல்லக்கூடியது என்றும் நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர் என்றபோதிலும், கோட்பாடுகள் உண்மையென இன்னும் நிரூபிக்கப்படவில்லை என்று அவர் அடிக்கோடிட்டுக் கூறினார்.

புதிய மாறுபாடு தொடர்பில் முழு உலகமும் மிகவும் கவலையடைந்துள்ளது உண்மைதான், இலங்கையும் அவ்வாறே உள்ளது. நாங்கள் இன்னும் சிக்கலில் இருந்து வெளியேறவில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

எனவே, தடுப்பூசி நிலையைப் பொருட்படுத்தாமல் அனைத்து மக்களும் அடிப்படை சுகாதார நடைமுறைகளுக்கு இணங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஒருவரின் நோய் எதிர்ப்பு சக்தியை பூஸ்டர் வலுப்படுத்துவதால், தகுதியுள்ள நபர்கள் தாமதமின்றி சரியான நேரத்தில் பூஸ்டரைப் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# வழக்கில் இருந்து ...

கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதிபதி அமில் ரணராஜா, அசாத் சாலியை, நேற்று (02) முழுமையாக விடுதலை செய்வதற்கான உத்தரவை பிறப்பித்திருந்தார்.

குற்றம் சாட்டப்பட்டிருந்த அசாத் சாலி, மதக் குழுக்களுக்கும் இனங்களுக்கும் இடையில் வெறுப்பு மற்றும் விரோதமான கருத்துக்களை வெளியிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட போதிலும், அவரது செய்தியாளர் சந்திப்பில் கூறியவற்றை முழுமையாக செவிமடுத்த போது, அத்தகைய தோற்றத்தை காண முடியாது இருந்ததென உயர்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட முழுமையான ஒலிப்பதிவு மற்றும் பல தொலைக்காட்சி சேவைகளில் செம்மையாக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்ட செய்திகள் இரண்டையும் முழுமையாக ஆராய்ந்தேன். கொரோனா நிலைமையின் கீழ், விஞ்ஞான ரீதியிலான எவ்விதமான முடிவுகளையும் எட்டாது, சடலங்கள் எரியூட்டப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும் அத்தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.

தனது அரசியல் எதிரிகளை விமர்சிப்பது, பயங்கரவாதத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவது உள்ளிட்ட விடயங்களில் எவ்விதமான பாரபட்சங்களுமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென செய்தியாளர் சந்திப்பின் போது தெரிவித்துள்ளார் என்றும் நீதிபதி அறிவித்தார்.

# வீடு வீடாக ஆராய்கிறது குழு

வர்த்தக மற்றும் விற்பனை நிலையங்களில் ஏற்பட்ட எரிவாயு தொடர்பான தீ விபத்துகள் மற்றும் வெடிப்புகள் குறித்து விசாரணை நடத்த எட்டு பேர் கொண்ட குழுவை இந்த வார தொடக்கத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நியமித்தார்.

பிரச்சினைக்கு உடனடித் தீர்வுகளை வழங்குவதற்காக, பிரச்சினைக்கான சாத்தியமான காரணங்களைக் கண்டறியும் பணியை குழு மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம், கொட்டாவ, அதுருகிரிய மற்றும் ஹங்வெல்ல பிரதேசங்களில் இவ்வாறான பல சம்பவங்கள் பதிவாகியுள்ள வீடுகளுக்கு, பொலிஸாருடன் இணைந்து குழுவின் உறுப்பினர்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கிடையில், நேற்றும் நாட்டின் சில பகுதிகளில் இருந்து எரிவாயுவுடன் தொடர்புடைய 10 வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

# ஸஹ்ரானின்...

அந்த தகவலை பொலிஸாருக்கு தெரிவிக்காமை குறித்து ஸஹ்ரானின் மனைவிக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியா பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றமிழைத்துள்ளதாக குற்றப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதிவாதி கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வழக்கு தொடுநர் சார்பில் மன்றில் ஆஜராகிய அரச தரப்பு சட்டத்தரணி மாதினி விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

விடயங்களை பரிசீலித்த நீதிபதி ஜே.ட்ரொக்ஸி, பிரதிவாதியான அப்துல் காதர் பாத்திமா ஹாதியாவை 2022 ஜனவரி மாதம் 10 ஆம் திகதி மன்றில் ஆஜராக்குமாறு கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார்.

# அதிகரிக்க முடியாது

தொடர்ந்து தெரிவித்த அவர், நாளாந்தம் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்புக்கு மத்தியில் பொதுமக்கள் பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ளனர். இவ்வாறான நிலையில், அவசர அவசரமாக பஸ் கட்டணத்தில் திருத்தம் செய்ய முடியாது என்றார்.

பஸ்களுக்காக நிவாரணங்கள் வழங்கும் விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதால், அதற்கான விசேட நிவாரண பொதி, எதிர்வரும் நாள்களில் அறிமுகப்படுத்தப்படும் என்றார்.

# சம்பிக்கவுக்கு எதிரான...

விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் தொடர்பில் பொய்யான சாட்சியங்களைத் தயாரித்ததாக சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சம்பிக்க ரணவக்க எம்.பி, அவருடைய சாரதி திலும் துசித்த குமார, வெலிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக அக்காலப்பகுதியில் பணியாற்றி பணி சுதத் அஸ்மடல ஆகியோருக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சாட்சிகளை உருவாக்கியமை, சாட்சிகளை அழித்தமை, சம்பிக்க எம்.பியை தண்டனையில் இருந்து தப்பவைக்கை பொய் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தமை உட்பட 16 குற்றச்சாட்டுகள் அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன.

# ஓமிக்ரான்
## நுழையும் ஓட்டைகள் குறைப்பு

மேலும், இந்த மாறுபாடானது ஏற்கெனவே நாட்டுக்குள் ஊடுருவியிருக்கலாம் என்றும் அவர் எச்சரித்தார்.

பயணிகளின் பிசிஆர் அறிக்கை எதிர்மறையாக இருந்தால் தவிர, பயணிகள் விமானத்தில் ஏற்றப்பட மாட்டார்கள் என்பதுடன், விமான நிலையத்தை வந்தடையும் பயணிகள் 72 மணி நேரத்துக்குள் பெறப்பட்ட எதிர்மறை பிசிஆர் அறிக்கையை எடுத்துச் செல்வது கட்டாயமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

“முழுமையாக தடுப்பூசி போடப்பட்டவர்கள் மற்றும் பிசிஆர் பரிசோதனை அறிக்கை எதிர்மறையாக இருக்கும் நபர்கள் மட்டுமே விமான நிலையத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள். மற்ற ஒவ்வொரு பயணிகளும் சிகிச்சை அல்லது தனிமைப்படுத்தப்பட்ட மையத்துக்கு அனுப்பப்படுவார்கள் என்று விளக்கினார்.

# “நான் ஒரு ஆசிரியர்; செய்தியாளர் இல்லை”

கருவியாக இருக்க முடியும் என்றாலும், அவர்களால் அரசாங்கத்தைப் பாதுகாக்க முடியாது. ஏனெனில் அதை நிர்வாகிகளால் மட்டுமே செய்ய முடியும் என்றும் பிரதமர் கூறினார்.

ஊடகவியலாளர்கள், அரசாங்கத்தைப் பாதுகாக்க வேலை செய்தால், அவர்களுக்கு இப்போது வழங்கப்படுவதை விட பெரிய காப்புறுதித் தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த காரணியை ஊடகவியலாளர்கள் புரிந்து கொண்ட போதிலும், சிலர் இதனைப் புரிந்து கொள்ளாதது துரதிர்ஷ்டவசமானது என்றார்.

# நாளையே திரும்பப் பெறலாம்

சக்தியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி, கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் ஹம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாகக் கூறினார்.

இதன்போது குறுக்கீடு செய்த முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி, ஹம்பாந்தோட்டை துறைமுகம் 70 வருட குத்தகைக்கே வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, இதற்குப் பதிலளித்த திஸ்ஸ அத்தநாயக்க, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நான் விவாதிக்கப்போவதில்லை. அவர் என்னுடைய முன்னாள் தலைவர், எவ்வாறாயினும் குத்தகைக்கு வழங்கப்பட்ட நாட்டின் எந்தவொரு வளங்களும் திரும்பப் பெறப்படவில்லை. பிறீமா நிறுவனம் 20 வருட குத்தகைக்கே வழங்கப்பட்டது. எனினும், அதனை இன்று வரையில் மீள பெற்றுகொள்ள முடியாத நிலையே காணப்படுகிறது என்றார்.

இதற்குப் பதிலளித்த ரணில், ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கு அமைய, நாளை வேண்டுமாக இருந்தாலும் துறைமுக ஒப்பந்தத்தை இரத்து செய்துவிட்டு, அதனை மீளப் பெற்றுகொள்ள முடியும். 70 வருடங்களுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதால், அந்த காலப்பகுதி முடிவதற்கு முன்கூட்டியே துறைமுகத்தைப் பெற்றுக்கொள்வதாக இருந்தால் அதற்கான நட்டஈட்டை செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் இந்த துறைமுகத்தை இவ்வாறே தொடர்ந்து நடத்தி செல்வதற்கு இணங்கியுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

# மடியை சீனாவுக்கு கொடுத்தார் ரணில்

மாட்டின் வாய் பகுதியை இலங்கைக்கு வழங்கிவிட்டு, பால் கறக்கும் பகுதி உள்ளிட்ட பின் பகுதியை சீனாவுக்கு வழங்கியிருக்கிறார் என்றும் சுட்டிக்காட்டினார்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு, ரணிலின் உரைக்குக் குறுக்கீடு செய்து மறுப்பு தெரிவித்து உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், ஹம்பாந்தோட்டை துறைமுகம் 70 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளதாக ரணில் கூறுகிறார். அவர் தவறாகச் சொல்கிறார். 70 அல்ல 99 வருடங்களுக்கே குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

வேண்டுமாக இருந்தால் ஒப்பந்தத்தை நான், ரணிலுக்குத் தருகிறேன். ஒப்பந்தத்தில் ரணில் கையெழுத்திடவில்லை என்றாலும், இந்த ஒப்பந்தத்தை ரணிலே தயாரித்துள்ளார். துறைமுகத்தை இரு நிறுவனங்களாகப் பிரித்து அதில் ஒரு பகுதியை வழங்கியுள்ளார். மாட்டின் வாய் பகுதியை இலங்கைக்கு வழங்கிவிட்டு, பால் கறக்கும் பகுதி உள்ளிட்ட பின் பகுதியை சீனாவுக்கு வழங்கியிருக்கிறார் என்றார்.

குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள இந்த துறைமுக ஒப்பந்தத்தை இரத்து செய்துவிட்டு வேண்டுமாக இருந்தால் நாளையே பெற்றுகொள்ள முடியும் என ரணில் கூறுகிறார். அது தவறு இந்த துறைமுகம் 99 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

ரணில் இதுவொரு சிறிய பிரச்சினை என்கிறார். அவருக்கு இது சிறிய பிரச்சினைதான். ரணில் ஆட்சியில் தொடர்ந்திருந்தால் முழு இலங்கையையும் விற்றிருப்பார் எனவும் தெரிவித்தார்.

# மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவது பொருத்தமானது

சுதந்திரக் கட்சி சார்பில் பாராளுமன்ற விசேட குழுவில் சாட்சியமளித்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, “நீண்டகாலமாக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படாமையால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு” என்றார். அத்துடன் அடுத்த வருட முதலாவது காலாண்டுக்குள் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆகக் கூடியது 5,500 ஆக வரையறுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

“உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை நீடிப்பது பொருத்தமற்றது” எனத் தெரிவித்த அமைச்சர் மஹிந்த அமரவீர, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் என்பதே பொது மக்களின் நிலைப்பாடு என்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் நடத்தப்பட்டு புதிய உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்யும்வரை குறித்த நிறுவனங்களின் அதிகாரம் ஆணையாளரின் கீழ் கொண்டுவரப்பட வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் நிமல் சிறிபால.டி.சில்வா இக்குழு முன்னிலையில் சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள சட்டத்தின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என சட்டமா அதிபர் கருதுவதாகவும், அதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் பாராளுமன்ற விசேட குழுவின் தலைவர் சபை முதல்வர், அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். மாகாண சபைத் தேர்தலை துரிதமாக நடத்த வேண்டும் என்பதே குழுவின் பொதுவான கருத்து என்றார்.

தேர்தல் முறை திருத்தப்படும் போது தொகுதி வாரியில் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 60 சதவீதமாகவும் விகிதாசார முறையின் கீழ் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 40 சதவீதமாகவும் காணப்பட வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடாக இருந்தது.

# இந்தியாவுக்குள் புகுந்தது ஓமிக்ரான்

அவர்களின் தனியுரிமையைப் பாதுகாக்க அவர்களின் அடையாளங்களை இப்போது வெளியிட முடியாது என்று கூறினார்.

இரண்டு நோயாளிகளுடன் தொடர்பில் இருந்த அனைவரும் கண்டுபிடிக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றனர், என்றார்.

"ஓமிக்ரான் கண்டறிதல் பற்றி பீதியடைய தேவையில்லை, ஆனால் விழிப்புணர்வு முற்றிலும் அவசியம். கொரோனாவுக்கு ஏற்ற நடத்தையைப் பின்பற்றுங்கள், கூட்டங்களைத் தவிர்க்கவும், "என்று அகர்வால் கூறினார். ஓமிக்ரான் மாறுபாடு தென்னாப்பிரிக்காவில் முதன்முதலில் கண்டறியப்பட்டது, அதன் பின்னர் கிட்டத்தட்ட 30 நாடுகளில் பரவியுள்ளது.

# வடக்கில் மின் உற்பத்தியை சீனா அதிரடியாக கைவிட்டது

2021 ஆம் ஆண்டின் முற்பகுதியில், நயினாதீவு, நெடுந்தீவு மற்றும் அனலைதீவு ஆகியவற்றில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்கான விலைமனுக்கோரலை சீன நிறுவனத்துக்கு வழங்கியமைக்கு இந்தியா இலங்கைக்கு கடும் எதிர்ப்பை தெரிவித்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மேற்குறிப்பிட்ட மூன்று தீவுகளில் கலப்பின புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைப்பை நிறுவுவதற்கான ஒப்பந்தம் ஜனவரி 2021 இல், சீனாவுக்கு வழங்கப்பட்டது.

இந்த ஒப்பந்தமானது, இலங்கை மின்சார சபையினால் செயல்படுத்தப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்பட்ட துணை மின்சார விநியோக நம்பகத்தன்மையை மேம்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்டணத்தை அதிகரிப்போம்

கொழும்பில் நேற்று (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கமானது, இலங்கைக்கு பாரிய நட்டத்தை ஏற்படுத்தியுள்ள நிறுவனம் என கோபா குழு சுட்டிக்காட்டியுள்ளதென தெரிவித்தார்.

ஆனால், இலங்கை போக்குவரத்து சபைக்கு காப்புறுதி இல்லை. அனுமதிப்பத்திரம் இல்லை. வீதி அனுமதிபத்திரம் இல்லை. புகை பரிசோதனை இல்லை. எனவே அனைத்தையும் செய்து நாம் அறிவிடுவதும் எதையும் செய்யாமல் இ.போ.ச பஸகள் அறிவிடுவதும் ஒரே கட்டணம் என்றால் எவ்வாறு நட்டமடையமால் இருக்க முடியும் என்றார்.

தனியார் பஸ்கள் நட்டம் என தெரிவித்து 1,200 மில்லியன் ரூபாயை இ.போ.ச வுக்கு பெற்றுக்கொடுப்பதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம் என குறிப்பிட்டார்.

எனவே, எமது நட்டத்தை ஈடுசெய்த விரைவாக போக்குவரத்து கட்டளைகள் சட்டத்தை திருத்துதல், பஸ்களில் நடத்துனர்களுடனோ நடத்துனர்கள் இன்றியோ பஸ்களை சேவையில் ஈடுபட அனுமதி வழங்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை அடுத்தவாரம் முன்வைக்கவுள்ளோம் என்றார்.

அத்துடன், ஜனவரி முதலாம் திகதியிலிருந்து பஸ் கட்டணங்களை அதிகரிக்கவுள்ளோம். இது தொடர்பான யோசனையை அடுத்த வாரம் இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவில் போக்குவரத்து அமைச்சருக்கும் அனுப்பவுள்ளோம் என தெரிவித்தார்.

அனைத்து பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ள நிலையில், நாம் பொறுமையுடன் இருந்தோம். விசேடமாக இந்த தொழிற்றுறை பாரிய நெருக்கடியில் உள்ளது. பஸ்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் கட்டாயம் உள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்த செலவை எம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. இ.போ.சவுக்கு 1,200 மில்லியனை கொடுக்க முடியும் என்றால், கொரோனாவுக்கு மத்தியில் ஏன் எமக்கு நிவாரணம் வழங்கமுடியாது என கேள்வி எழுப்பிய அவர், அரசாங்கம் முன்னெடுக்கும் தவறான செயற்பாடுகளுக்கு பஸ் உரிமையாளர்கள் பலியாக வேண்டிய அவசியமில்லை என்றார்.

# தேசிய பாதுகாப்பை...

தொடர்ந்து உரையாற்றிய அவர், 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர்களில், 9.5 கிலோ கிராம் நிறை கொண்ட எரிவாயு நிரப்பட்டுள்ளதோடு, எரிவாயு கலவைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டமையே நாடு முழுவதிலும் ஏற்படும் வெடிப்புகளுக்குக் காரணம் என்றார்.

இதுவொரு ஆபத்தான விடயம், இது தொடர்பில் ஜனாதிபதி விரைந்து செயற்படாது, இரு வாரங்களில் அறிக்கையை பெற்று தீர்வை வழங்குவதாகக் கூறுகிறார். ஆபத்தான இந்த சிலிண்டர்கள் சந்தைகளில் இருந்து மீளப்பெறப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கி அதற்கு விசேட வரிச்சலுகை வழங்குவதற்கான யோசனைக்கு மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான எம்.பி.க்கள் எதிராக வாக்களிக்கவில்லை. எனவே அந்த துறைமுக விற்பனைக்கு மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரும் பொறுப்பேற்கவேண்டும். அன்று அதற்கு எதிராக ஜே.வி.பி. மாத்திரமே வாக்களித்தது.

இன்று பெரும்பாலான தோட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வசதி செய்துக்கொடுக்கப்படாதபோதும் பெருந்தோட்ட பகுதிகளில் இருந்து ஏனைய இடங்களுக்கு குடிநீர் திட்டங்கள் கொண்டு செல்லப்படுகின்றன என்றார்.

# தங்க பூதத்தை விற்க வேண்டாம்

பா.நிரோஸ்

முதலீடுகள் என்ற பெயரில் நாட்டின் வளங்களை தற்போதைய அரசாங்கம் விற்பனை செய்து வருவதாக தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, முதலீடு என்பது வளங்களை விற்பனை செய்வதல்ல எனவும் தெரிவித்தார்.



2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கி 325 டொலர் மில்லியன் கடனை பெற அரசாங்கம் முயற்சிப்பதாகவும், அதேபோல, கொழும்பு துறைமுகத்தின் 13 ஏக்கர் காணியை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்க அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ந்து துறைமுகங்கள் இவ்வாறு விற்பனை செய்யப்பட்டு வந்தால், நாட்டுக்கென துறைமுகமொன்று இல்லாது போகும். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் என்பது தங்க பூதம். அதனை விற்காது, தேசிய வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறினார்.

# சமையலறையை பாதுகாக்க முடியவில்லை

எவேளையும் பாதுகாப்பு அளிப்பதாக கூறி, ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தால் வீட்டின் சமையலறையைக் கூட பாதுகாக்க முடியவில்லை எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார், சமையலறை வெடித்துள்ளதா? அல்லது என்ன நடந்துள்ளது என்ற அச்சத்திலேயே மக்கள் ஒவ்வொரு நாளும் கண் விழிக்கின்றனர் என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (2) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

ஏப்ரல் மாதம் சமையல் எரிவாயு நிறை தொடர்பான விடயத்தில் நுகர்வோர் அதிகார சபை பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய போது, சமையல் எரிவாயு நிறுவனங்கள் தமது தேவைக்கு ஏற்ப நடந்து கொண்டன.

தற்போது சமையல் எரிவாயு தாங்கி வெடிக்கவில்லை. கசிவு தான் ஏற்பட்டுள்ளது. அதனால் தான் வெடிப்பு என சில முட்டாள்கள் கதைக்கின்றனர்

இப்போது சிலிண்டர் வெடிக்கின்றதா? அடுப்பு வெடிக்கின்றதா என்பதல்ல பிரச்சினை. இரவில் எல்லோரும் மரண பயத்தில்தான் உறங்க செல்வதே பிரச்சினை என்றார்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வந்த அரசாங்கத்துக்கு வீட்டின் சமையலறையின் பாதுகாப்பை கூட உறுதிப்படுத்த முடியவில்லை.

எனவே, இனிமேலும் முட்டாள் தனமான கதைகளை கூறிக்கொண்டிருக்காமல் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை இதிலிருந்து விலகிச் செல்ல இடமளிக்காமல். இதனால் ஏற்பட்டுள்ள உயிராபத்துகள், பொருள் சேதங்களுக்கு கண்டிப்பாக நட்டஈட்டை பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும்.



நுகர்வோர் அதிகாரசபை குற்றப்புலனாய்வு பிரிவினருடன் இணைந்து இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து குற்றவாளிகளை அடையாளம் காணவேண்டும்.

தொழிநுட்ப ரீதியான அறிவியல் ரீதியிலான விசாரணைகளை முன்னெடுத்து, இதற்கான காரணம் என்ன என்பது குறித்து கண்டறிய வேண்டும் என்றார்.

## ‘200 கோப்புகள் மாயம்; விசாரணைகள் ஆரம்பம்’

பா.நிரோஸ்



காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் இருந்த 200 கோப்புகள் மாயமாகியுள்ளன என காணி மறுசீரமைப்பு அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்ததோடு, இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்க விசேட பொலிஸ் குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தர்ர.

பாராளுமன்றத்தில் நேற்றைய (02) அமர்பில் கலந்துகொண்டு, வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருக்க வேண்டும். இதனாலேயே 200 கோப்புகள் மறைக்கப்பட்டிருக்கும். காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் பாரிய ஊழல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. இதனை நான் இல்லை என்று சொல்லப்போவதில்லை. இதுபோன்ற மோசடிகள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

## ஆறுகளில் குப்பைகளை கொட்டினால்

## நீர்கட்டணம் அதிகரிக்கும்

பா.நிரோஸ்



குடிநீர் சுத்திகரிப்புக்கு அதிகளவான நிதி செலவிடப்படுவதாக தெரிவிக்கும் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, ஆறுகளில் குப்பை கொட்டும்போதும், உங்கள் மின்கட்டணம் உயரும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நீர்வழங்கல் அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் பதிலளித்து தொடர்ந்து உரையாற்றிய அவர், நீர் சுத்திகரிப்புக்கான செலவுகள் அதிகரிக்க அதிகரிக்க நீர்கட்டணங்களும் அதிகரிக்கும். இதன்படி, ஆறுகளில் எவராவது குப்பைகளை கொட்டும்போது அவர்களின் நீர் கட்டணம் உயரும் என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என கூறினார்.

தோட்டப்புறங்களில் உள்ளவர்களுக்கு முறையான குடியிருப்புகளோ, கழிவறைகளோ இல்லை. இவர்களின் மனித கழிவுகளும் ஆறுகளிலேயே கலக்கின்றன. இவர்களுக்கு முறையான வீடுகள், கழிவறைகள் வழங்க வேண்டும். அவ்வாறு செய்யும்போது குடிநீர் சுத்திகரிப்பு செலவிடுவது குறையும் எனவும் தெரிவித்தார்.

## புலம்பெயர் ஈழத்தமிழர்கள் வர விரும்புகிறார்கள்

## கப்பல் சேவை ஆரம்பிக்க வேண்டும்

சார்ள்ஸ் எம்.பி



பா.நிரோஸ்

இந்தியாவில் உள்ள ஈழத்தமிழர்கள் மீண்டும் நாட்டுக்கு வருவதற்கு விரும்புவதால், தலைமன்னார் - இராமே ஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் சேவையை உடனடியாக மீள ஆரம்பிக்க வேண்டும் என கூட்டமைப்பு சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி அரசாங்கத்திடம் வலியுறுத்தினார்.

மேலும் இந்த கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் அரசாங்கம் தரப்பிலேயே தாமதம் காணப்படுவதாக இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவிப்பதாகவும் கூறிய அவர், இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்பு இதற்குக் கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், யுத்தம் காரணமாக புலம் பெயர்ந்து இந்தியாவில் வாழும் ஈழ தமிழர்கள் நாடு திரும்ப விரும்புகிறார்கள். விமானம் ஊடாக வரமுடியாத நிலை இருக்கிறது. அவர்களிடம் உள்ள பொருள்களையும் எடுத்து வர வேண்டும் என்பதால், அவர்களால் கப்பலால் மாத்திரமே வர முடியும்

எனவே, தலைமன்னார் - இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கூறினார்.

# பாதுகாப்புகள் கேள்விக்குறியானது

பா.நிரோஸ்



தற்போதைய அரசாங்கத்தால் நாட்டின் பாதுகாப்பும், வீட்டின் பாதுகாப்பும் கேள்விக் குறியாகியுள்ளதாக தெரிவித்த கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், நாட்டு மக்களை அரசாங்கம் நிம்மதியாக வாழவிடுவதில்லை எனவும் தெரிவித்தார்.

வரவு- செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நீர்வழங்கல் அமைச்சின் ஊடாக மலையகப் பகுதிகளுக்கு பெரும் சேவையாற்ற வேண்டியிருக்கிறது. நீர்வழங்கல் அதிகாரசபையின் ஊடாக சுத்தமான குடிநீரை மலையகப் பகுதிகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மலையகத்தில் இருந்து பெறப்படும் நீரை சுத்திகரித்து நாட்டின் ஏனையப் பகுதிகளுக்கு வழங்கப்படுகின்றன. ஆனால் மலையகப் பகுதிகளுக்கு சுத்தமான குடிநீர் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவித்தார்.

மலையகப் பாடசாலைகள், வைத்தியசாலைகள் உள்ளிட்டப் பொது இடங்களில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதில்லை. இதனை பெற்றுகொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கோதுமைமாவின் விலை 17 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்களை எந்தவகையிலும் நிம்மதியாக வாழவிடாத அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் இருக்கிறது எனவும் கூறினார்.



## களப்பிலிருந்து சடலம் மீட்பு

ரஸீன் ரஸ்மின்

முந்தல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மதுரங்குளி மல்லம்பிட்டி களப்பு பகுதியில் இனந்தெரியாத நபர் ஒருவரின் சடலமொன்று நேற்று (02) மீட்கப்பட்டுள்ளது.

மீனவர் ஒருவர் கிராம உத்தியோகத்தர் ஊடக பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில், முந்தல் பொலிஸாரும், பொலிஸ் தடயவியல் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

55 வயது மதிக்கத்தக்க இவர், வெள்ளை நிற சேர்ட் மற்றும் சாரம் அணிந்திருந்துள்ளார். முந்தல் பொலிஸ் பிரிவில் 25 வயது இளைஞன் காணாமல் போனமை தொடர்பில் முறைப்பாடு உள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், 50 வயதுக்கு மேற்பட்டோர் காணாமல் போனவர்கள் தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளனவா என்பது பற்றி உடப்பு மற்றும் புத்தளம் ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.





## அமரர்.வி.கே. வெள்ளையனின்

## 50ஆவது நினைவுத் தினம்

எம். கிருஸ்ணா

தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் அமரர்.வி.கே. வெள்ளையனின் 50 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு, ஹட்டன் ஸ்ரீ சண்முக நாதர் ஆலயத்திலும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஹட்டன் தலைமை பணிமனையிலும் நேற்று (2) விசேட நினைவு தின பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து, அமரர் வி.கே. வெள்ளையனின் நினைவுத்தூபி அமைந்துள்ள டிக்கோயா தோட்டத்தில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

## இலங்கைக்கு அன்பளிப்பாக கிடைத்த

## பைஸர் தடுப்பூசிகள்



நெதர்லாந்திலிருந்து மேலும் ஒரு தொகை பைஸர் தடுப்பூசி அன்பளிப்பாக இலங்கைக்கு கிடைத்துள்ளன.

இதற்கமைய, சுமார் 182,400 பைஸர் தடுப்பூசிகள் டுபாயிலிருந்து நேற்று (2) அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது.

1,014 கிலோகிராம் நிறையுடைய குறித்த தடுப்பூசிகள் 32 பொதிகளில் இடப்பட்டு, நெதர்லாந்தின் எம்ஸ்டர்டேம் நகரிலிருந்து டுபாய்க்கு கொண்டு வரப்பட்டது.

டுபாயிலிருந்து எமிரேட்ஸ் விமான நிறுவனத்தின் ஈ.கே. 650 என்ற சரக்கு விமானத்தில் நேற்று (2) காலை 8.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் விசேட குளிரூட்டப்பட்ட லொறி ஊடாக கொழும்பு மத்திய களஞ்சிய கட்டட தொகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னர்

## ஆலோசனைகளை ஜனாதிபதி பெற வேண்டும்



நாட்டில் உரத் தடையை அமுல்படுத்துவதற்கு முன்பு, அது தொடர்பில் அதற்கு தேவையான ஆலோசனைகளை, புத்திஜீவிகளிடமிருந்து ஜனாதிபதி பெற்றிருந்தால், சிக்கலை எதிர்நோக்கியிருக்க வேண்டியதில்லையென, நீதியான சமூகத்திற்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (2) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியான தீர்மானங்கள் எடுக்கும் போது, பாரபட்சமின்றி தொலைநோக்குடன் அனைத்து தரப்பினரையும் திருப்திபடுத்தும் வகையில் தீர்மானங்களை எடுப்பது அவசியம் என்பதை அதிகாரிகள் புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

“இன்று நாடு மிகவும் ஸ்திரமற்ற நிலையில் உள்ளது. நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகளும், அவ்வப்போது எடுக்கும் முடிவுகளும்தான் இதற்கு முக்கிய காரணமாக பார்க்கிறோம். இதை சீரமைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உரம் கிடைக்காததால் விவசாயிகள் பலர் விவசாயத்தை கைவிட்டனர். இதனால் உற்பத்தியில் கடும் சரிவு ஏற்படுமென நிபுணர்கள் கூறுகின்றனர். அரிசியை இறக்குமதி செய்வதை இதற்கான தீர்வாக நாம் பார்க்கவில்லை.

அரிசியை இறக்குமதி செய்ய அன்னியச் செலாவணியை வீணடிக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

# "முஸ்லிம், தமிழ் மக்கள் சேர்ந்து பயணிக்க வேண்டும்"

பாறுக் ஷிஹான்



"சிறுபான்மை மக்களாகிய முஸ்லிம், தமிழ் மக்கள் எதிர்காலத்தில் ஒன்று சேர்ந்து அரசியல் என்ற பயணத்தில் பயணிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. ஏனெனில், இரு சமூகங்களும் ஒன்று சேரும் போது தான் இந்த அரசாங்கத்துக்கும் இனி வருகின்ற அரசாங்கத்துக்கும் அழுத்தம் கொடுத்து சிறுபான்மையினரின் உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியும்" என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். நஸீர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம், அட்டாளைச்சேனையில் நேற்று முன்தினம் (01) நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின் கலந்து கொண்டு மேற்கண்டவாறு நஸீர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:

"அம்பாறை மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கின்றேன். எனக்கு சுமார் 27 ஆயிரம் வாக்குகளை கடந்த தேர்தலில் அளித்திருந்தும் பாராளுமன்றம் செல்லாவிட்டாலும் கூட குறிப்பாக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள், சிறுபான்மை மக்களாகிய முஸ்லிம் மக்களுக்கு பாதகமாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் நாம் மௌனமாக இருக்க முடியாது. இருந்தபோதிலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில், முஸ்லிம் சமூகத்தின் பல விடயங்கள் இன்று இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போது பல முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் குறித்த ஆட்சி நிலையில்லாததன் காரணமாக, முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள் ஏனைய பல்வேறுபட்ட பிரச்சினைகள் உள்ள நிலையில், இந்த அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியவில்லை என்ற கவலையும் என்னுள் இருக்கின்றது. குறிப்பாக, அண்மையில் ஜனாதிபதி 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்ற அடிப்படையில் ஜனாதிபதி செயலணி ஒன்றினை அமைத்துள்ளார். இந்தச் செயலணிக்கு தலைவராக பொதுபல சேனா அமைப்பின் செயலாளராக இருக்கின்ற கலகொட அத்தே ஞானசார தேரரை நியமித்திருக்கின்றார்.

இந்நியமனமானது தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பாதிப்பான விடயமாக அமைவதுடன் இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். இந்த நியமனத்தை இல்லாமல் செய்வதே எமது சிறுபான்மை சமூகத்துக்கு ஜனாதிபதி செய்யும் பேருதவியாகும். பாராளுமன்றத்திலும் கூட எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயம் குறித்து உரையாற்றி இருந்த போதிலும் இதனை அவர்கள் இதுவரை பொருட்படுத்தவில்லை என்பது வேதனை தருகின்றது.

இதை தவிர ஜனாதிபதி, பிரதமர் இந்த அரசாங்கம் அமைச்சரவை கூட்டத்திலும் தன்னிச்சையாக எடுக்கின்ற தீர்மானங்களும் சிறுபான்மை மக்களுக்கு பெரும்பாலும் இழப்புகளையே ஏற்படுத்துகின்றன என்ற நிலைப்பாட்டில் தான் உள்ளதை நாம் அறிவோம்.

இந்நாட்டின் ஜனாதிபதி எந்தவொரு தீர்மானங்களை மேற்கொண்டாலோ இந்த நாட்டின் பிரஜை என்ற அடிப்படையில் எமது பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஒன்றினைத்து முடிவெடுத்து சட்டங்களை அமல்படுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன்" என்று கூறினார்.

மாதகல் காணி விவகாரம்:

# ஆளுநர் விளக்கம்

'காணி வழங்குவேன் என நான் கூறவில்லை"

எஸ். நிதர்ஷன், எம். றொசாந்த்



"மாதகல் காணிகளை கடற்படைக்கு வழங்குவதாக நான் ஒருபோதும் கருத்து தெரிவிக்கவில்லை" என, வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர், கடற்படைக்கு மாதகல் காணிகளை வழங்குவதாகத் தெரிவித்து, சில ஊடகங்களில், நேற்று முன்தினம் (01), செய்தி வெளியாகியிருந்தது.

இந்நிலையில், இது தொடர்பில், நேற்று (02), தனியார் நிறுவனத்தின் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்துரைத்த அவர், "நேற்று முன்தினம் நான், காணி உரிமையாளர்களுடன் பேசுவதாக வெளியான செய்தி பிழையானது. நேற்றைய தினமே (02), முதன்முதலாக, காணி உரிமையாளர்களுடன் நான் நேரடியாக கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளேன். இதற்கமைய, காணி உரிமையாளர்களுடன் பேசி, காணியின் உறுதிகளை சரி பார்த்து, காணி உரிமையாளர்களின் நிலைப்பாடுகளை அறிந்த பின்னரே, முடிவுகளை எடுக்க முடியும்" என்றார்.




# நூல் வெளியீட்டு விழா

றொசேரியன் லெம்பேட்

சிரேஷ்ட ஊடகவியலாளர் பி.மாணிக்கவாசகம் எழுதிய 'மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்' எனும் கட்டுரைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா, மன்னார் நகரசபை கலாசார மண்டபத்தில், இன்று (03) காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாந்தை மேற்கு மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக, மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி ஏ.சகிலா பானு கலந்துகொள்ளவுள்ளார்.

குறித்த 'மாற்றத்தை நாடும் மாற்றுத்திறனாளிகள்' நூலானது, இயலாமைக்குள் இயலுமையைக் கொண்டவர்களின் வாழ்வியலைச் சித்திரிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில்

# டெங்கு அபாயம்

டெங்கு கட்டுப்பாட்டு வாரமும் பிரகடனம்

எம்.றொசாந்த்



யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு அபாயம் அதிகரித்துள்ள நிலையில், டிசெம்பர் 6ஆம் திகதி தொடக்கம், டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு, கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக, யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், நேற்று முன்தினம் (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவிய மழையுடனான காலநிலையின் பின்னர், டெங்கு நுளம்பு பரவும் அபாயம் அதிகரித்துக் காணப்படுகிறது.

கடந்த வருடத்தைவிட, இந்த வருடத்தின் கடந்த வாரம் வரை, டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்த நிலை காணப்படுகிறது. கடந்த வாரம் வரை 133 பேருக்கு டெங்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளதென்று அறிக்கையிடப்பட்டு உள்ளது.

டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகமாக செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் காணப்படுகிறது. அதன் அடிப்படையிலேயே, சுகாதார விழிப்புணர்வு குழுக் கூட்டத்தில் கொரோனா, டெங்கு தொடர்பிலும் ஆராய்ந்து இருந்தோம்.

இதற்கிணங்க, டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து இருப்பதன் பிரகாரம், டிசெம்பர் 6ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரத்தை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தி, அந்த வாரம் யாழ்ப்பாண குடாநாடு பூராகவும் அனைத்து தரப்பினர்களுடனும் இணைந்து, நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கின்றோம்.

அதனடிப்படையில், ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும், டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு செயலணி கூட்டத்தை நடத்தி, ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு ரீதியாகவும் அவர்களுடைய பிரதேசத்தில் டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள கூடிய நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என கோரி இருக்கின்றோம் எனவும், மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள உள்ளூராட்சி மன்றத்தினர், சுகாதார வைத்திய அதிகாரியினர், ஏனைய அதிகாரிகள் ஆகியோருடன் இணைந்து, இந்த டெங்கு ஒழிப்பு வாரத்தை செயற்படுத்துவதற்கு தீர்மானித்து இருக்கின்றோம் எனவும், அவர் தெரிவித்தார்.




வவுனியாவில் அடுப்பு சிதறியது;

# யாழில் குழாய் கருகியது

க. அகரன், எம்.றொசாந்த், எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறல், எரிவாயு அடுப்பு - சிலிண்டரை இணைக்கும் குழாய் எரிந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூரிலும் வவுனியா, வேரகம அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்ட பகுதியிலும் இச்சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

நல்லூர் கோவில் வீதியில் உள்ள வீடொன்றில், நேற்று (02), மதிய உணவு தயாரித்துக்கொண்டிருந்த போது, எரிவாயு அடுப்பு - சிலிண்டரை இணைக்கும் குழாய் தீப்பற்றி எரிந்துள்ளது.

இதை அவதானித்த வீட்டு உரிமையாளர், வெளியில் ஓடிச்சென்று, முன்னால் இருந்த வர்த்தக நிலையத்தினரை அழைத்துள்ளார்.

இதன்போது, உடனடியாக ஓடிச் சென்ற வர்த்தக நிலையத்தினர், எரிவாயு சிலிண்டரை அகற்றி தீயை அணைத்தமையால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படாது தடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா, வேரகம அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடொன்றில், நேற்று முன்தினம் (01), எரிவாயு அடுப்பு வெடித்துள்ளதாக, பிரதேசவாசி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த வீட்டில் இருந்த இல்லத்தரசி, சமையல் செய்துவிட்டு, எரிவாயு அடுப்பை நிறுத்தி வைத்ததன் பின்னரே, திடீரென தீப்பிடித்து, அந்த எரிவாயு அடுப்பு ஒளிவிட்டு வெடித்ததாகவும் கூறினார்.

அடுப்பு தீ பற்றி எரியும் போது, அயலவரை அழைத்ததாகவும் மேலும் சேதம் ஏற்படாமல் இருக்க எரிவாயு சிலிண்டரில் இருந்து ரெகுலேட்டரை அகற்றியதாகவும், குறித்த இல்லத்தரசி கூறினார்.

சம்பவம் தொடர்பில், இரட்டைபெரியகுளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மலேரியா தடுப்புப் பிரிவில்

# சேவையாற்றி ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு கௌரவம்





ஏ.எம்.கீத்

திருகோணமலை மாவட்ட மலேரியா ஒழிப்புப் பிரிவில், தெளி கருவி இயக்குநர்களாக பல வருட காலம் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் சுமார் 30 ஊழியர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வு, கிழக்கு மாகாண தெளி கருவி இயக்குநர் இயக்கத்தின் ஏற்பாட்டில், திருகோணமலையில் உள்ள மாகாண சுகாதார சேவைகள் பணிமனை மண்டபத்தில் நேற்று (01) நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம அதிதியாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் கலந்துகொண்டார்.

இதில் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் டீ.ஜீ.எம். கொஸ்தா, பிரதி பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் டொக்டர் வீ. பிரேமானந்த், கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் என். சரவணபவன், பிராந்திய மலேரியா தடுப்பு பிரிவு வைத்தியர் பீ.உசாந்தினி, வைத்தியர் டி.நிலோஜன், வைத்தியர் எம்.எம்.எம்.முனாஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.




கிழக்குப் பல்கலைக்கழக

# மட்டக்களப்பு வளாகங்கள் முன்பாகப் போராட்டம்

பேரின்பராஜா சபேஷ், வா. கிருஸ்ணா

கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பில் உள்ள வளாகங்களுக்கு முன்பாக அடையாள மௌன தொழிற்சங்கப் போராட்டமொன்று நேற்று(02) இடம்பெற்றது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக் குழுவின் தீர்மானத்துக்கமைய நீண்ட காலமாக நிலவிவரும் பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் சம்பள முரண்பாடு மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அடையாள மௌன தொழிற்சங்கப் போராட்டம் இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

இதனொரு கட்டமாக மட்டக்களப்பில் உள்ள கிழக்கு பல்கலைக்கழக வளாகங்களுக்கு முன்பாக நேற்று நண்பகல் 12 மணியளவில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வை வழங்கு, சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும் குழுவின் அறிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்து போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாதைகளை போராட்டத்தில் ஈடுபட்டோர் தாங்கியிருந்தனர்.

கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவும் மட்டக்களப்பில் உள்ள சௌக்கிய விஞ்ஞான பீடத்துக்கு முன்பாகவும் கல்லடி, நாவற்குடா சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்துக்கு முன்பாகவும் இந்த அமைதி வழி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# சம்பூரில் ஜெலிக்னைட் குச்சிகள் கைப்பற்றப்பட்டன



இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சம்பூர், சூடக்குடா பகுதியில் நேற்று (02) காலை 9.30 மணிக்கு ஐந்து ஜெலிக்னைட் குச்சிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தலைமன்னாரில்

# 12 மாணவர்களுக்குத் தொற்று

றொசேரியன் லெம்பேட்



தலைமன்னார் துறை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 12 மாணவர்கள் உட்பட 15 பேருக்கு, புதன்கிழமை (01) மாலை, கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக, மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்துரைத்த அவர், தலைமன்னார் வைத்தியசாலையில், பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளடங்களாக 50 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் போது தலைமன்னார் துறை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் 12 பேர், பெற்றோர்கள் 3 பேர் உள்ளடங்கலாக 15 பேருக்கு, கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர் ஒருவருக்கு, தலைமன்னார் வைத்தியசாலையில் ஏற்கெனவே தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், குறித்த மாணவருடன் தொடர்புடைய மாணவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதே, பாடசாலை மாணவர்கள் உள்ளடங்கலாக 15 பேருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

மேலும், குறித்த மாணவர்களுடன் தொடர்புடைய மாணவர்களை, வீடுகளில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் கூறினார்.

மலையகத்தில்

# அமோக விற்பனையில் கறுவா விறகு



ரஞ்சித் ராஜபக்ஸ

மலையகத்தில் சமையல் எரிவாயுவின் விற்பனை குறைவடைந்துள்ள நிலையில், தோட்டப்புறங்களை அண்மித்த நகரங்களில் விறகு விற்பனை அதிகரித்துள்ளது.

நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் விறகுகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இதில் அதிகமாக கறுவா விறகு மொத்த விற்பனையாக விற்பனை செய்யப்படுகின்றது.

இதுவரை சமையல் எரிவாயுவை பயன்படுத்தியவர்கள், சமையல் எரிவாயுவின் விலை அதிகரிப்பு, ஆங்காங்கே அடுப்புகள் வெடித்துச் சிதறுதல் உள்ளிட்ட காரணங்களால் கறுவா விறகுகளை அதிகளவு கொள்வனவு செய்து வருகின்ற நிலையில், கறுவா விறகுகட்டு ஒன்றின் விலை 50 ரூபாய்க்கு விற்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விலை உயர்வு தொடர்பில் அரசாங்கம்

# மீள்பரிசீலனை செய்யும்

## பாரதி அருள்சாமி நம்புகிறார்

எஸ்.கணேசன்



கோதுமை மா மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்குமாறு நாம் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றோம் எனத் தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபசெயலாளரும், பிராஜா சக்தி நிறுவனத்தின் பணிப்பாளருமான பாரத் அருள்சாமி, இதன்படி விலை உயர்வு தொடர்பில் அரசாங்கம் மீள்பரீசிலனை செய்யும் என நம்புகின்றோம் என்றார்.

ஹட்டனில் நேற்று முன்தினம் (01) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "கூட்டு ஒப்பந்தம் என்ற விடயப்பரப்புக்குள் சம்பளம் மட்டும் உள்ளடக்கப்படவில்லை. தொழிலாளர்களின் உரிமைசார் விடயங்கள், நலன்புரி அம்சங்களும் அதற்குள் இருக்கின்றன. இதனால்தான் கூட்டு ஒப்பந்தத்துக்காக நாம் குரல் கொடுத்தோம். ஒரு சந்தர்ப்பத்தில் சம்பள நிர்ணயசபை, சம்பளத்தை குறைத்தபோதுகூட கூட்டு ஒப்பந்தம் ஊடாக அதிகரிப்பை நாம் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

ஆனால், கூட்டு ஒப்பந்தம் ஊடாக எதையும் செய்ய முடியாது என விமர்சித்தவர்கள், உரிய மாற்றுத் திட்டத்தை முன்வைக்கவில்லை. பதாதைகளை ஏந்தி போராடுவதால் மட்டும் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. தொழிலாளர்களுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்கு இருக்கின்றது. தொழிற்சங்க கட்டமைப்பு ஊடாகவே இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கு அரசியல் அந்தஸ்துக்கூட கிடைத்தது.

ஜே.டி.பி நிறுவனத்துடன் தான் எமக்கு பல பிரச்சினைகள் உள்ளன. தொழிலாளர்களுக்கு சேவைகால கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை; மரங்கள் வெட்டப்படுகின்றன; தோட்டங்கள் காடாக்கப்படுகின்றன. இவை தொடர்பில் கவனம் செலுத்தி வருகின்றோம். பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கூட்டு ஒப்பந்தம் இல்லாத நிலையில் முதலாளிமார் சம்மேளனத்துடன் நாம் பேச்சு நடத்தியுள்ளோம். இனி மாதாந்தம் அந்தச் சந்திப்பு நடைபெறும். அதன்போது தொழில் பிணக்குகள் தீர்க்கப்படும்.

கொரோனா நெருக்கடியால் உலகளவில் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இதன் தாக்கம்தான் எமது நாட்டிலும் எதிரொலிக்கின்றது. ஆனாலும் கோதுமை மா மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்குமாறு நாம் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றோம் என்றார்.

கேகாலை மாவட்ட மக்களுக்கு



# எயிட்ஸ் தெளிவூட்டல்

சிவாணி ஸ்ரீ

உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு, கேகாலை மாவட்ட மக்களுக்கு எயிட்ஸ் நோய் குறித்து தெளிவு படுத்தும் நிகழ்வொன்று நேற்றுமுன்தினம் (1) சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் கேகாலை ஸ்லீக் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது எயிட்ஸ் நோய் சம்பந்தமாக, கேகாலை மாவட்ட பாலியல் நோய் தொற்று ஒழிப்பு விசேட வைத்திய நிபுனர் சியாமா சோமவர்தனவால் தெளிவு படுத்தப்பட்டது.

கேகாலை மாவட்ட பாலியல் தொற்று ஒழிப்பு நிறுவனத்தால் கேகாலை மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட, எயிட்ஸ் நோய் ஒழிப்பு குறித்து பல்வேறு போட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கேகாலை மாவட்ட சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அசேல பெரேரா, கேகாலை மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி வைத்தியர் மிஹிரி பிரியங்கனி, கேகாலை மாவட்ட பாலியல் நோய் தொற்று ஒழிப்பு பிரிவின் பொறுப்பாளர் வைத்தியர் நிலங்க ஜயசிங்க உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கேக் வெட்டிய தொழிலாளர்கள்...







ஹேலீஸ் கம்பனியின் கீழ் இயங்கும், தலவாக்கலை –கிரேட்வெஸ்டன் லூசா தோட்ட நிர்வாகத்தால் அத்தோட்ட தொழிலாளர்களின் பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு மாதமும் பிறந்தநாள் கொண்டாடும் அனைத்து தொழிலாளர்களையும் ஓர் இடத்திற்கு வரவழைத்து, தோட்ட நிர்வாகத்தால் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடப்படுகின்றமை சிறப்பம்சமாகும். (பி. கேதீஸ்)

மவுசாகலை விவசாய அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக



# மஞ்சள் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது

செ.தி பெருமாள்

சௌபாக்கியா வீட்டுத் தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக, அம்பகமுவ பிரதேச செயலகத்தின் மவுசாகலை கிராம சேவகர் பிரிவில் பதிவு செய்யப்பட்டுள்ள, மவுசாகலை விவசாய அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக வீட்டு தோட்ட பயனாளர்களின் உற்பத்தி திறனை ஊக்குவிக்கும் நோக்கத்தில் சுமார் 500 மஞ்சள் கன்றுகள் நேற்று முன்தினம் (01) வழங்கி வைக்கப்பட்டன.

இதன் போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையில் மஞ்சளின் தட்டுப்பாடு, விலையேற்றம் காரணமாக மஞ்சள் உற்பத்தியின் முக்கியத்துவம் குறித்தும் வீட்டுத்தோட்ட பயனாளிகளுக்கு விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தெளிவூட்டப்பட்டது.

**“ மவுசாகலை விவசாய அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக வீட்டு தோட்ட 500 பயனாளர்களுக்கு, மஞ்சள் உற்பத்தியின் முக்கியத்துவம் கருதி, அதன் உற்பத்தி திறனை ஊக்குவிக்கும் நோக்கத்தில் 500 மஞ்சள் கன்றுகள் வழங்கப்பட்டன**

இந்நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினரும் மவுசாகலை விவசாய அபிவிருத்தி சங்க தலைவருமான எம். பி ஆனந்தன், மவுசாகலை பிரிவின் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்அஜித், ஊடகவியலாளர் கே. ஆர். ஹெலன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கம்பி காட்டிய கைதி சிக்கினார்

ராமு தனராஜா

ஹிங்குருகடுவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் செவ்வாய்க்கிழமை (30) சிறைக்கூண்டின் கம்பியை கழற்றி, தப்பிச் சென்ற நிலையில் நேற்றுமுன்தினம் (01) காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபருக்கு எதிராக பண்டாரவளை, பதுளை, வெலிமடை நீதவான் நீதிமன்றங்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலைலேயே, ஹிங்குருகடுவ பொலிஸாரால் 31 வயதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

**“ சந்தேக நபருக்கு எதிராக பண்டாரவளை, பதுளை, வெலிமடை நீதவான் நீதிமன்றங்களில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலைலேயே, ஹிங்குருகடுவ பொலிஸாரால் 31 வயதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்**

இந்த நிலையில், பொலிஸ் நிலைய கூண்டிலிருந்து தப்பிச் சென்றிருந்த இவரை தேடும் பணிகயைத் தீவிரப்படுத்திய பொலிஸார், வராதொலை பகுதியில் உள்ள வீடொன்றில் மறைந்திருந்தபோது கைது செய்துள்ளனர். சந்தேகநபரை பசறை நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

பிலிங்போனி தோட்டத்திலிருந்து

# சிறுத்தையின் உடலம் மீட்பு



எம். கிருஸ்ணா, ரஞ்சித் ராஜபக்ஷ

தேயிலைத் தோட்டமொன்றிலிருந்து உயிரிழந்த நிலையில் சிறுத்தையொன்றின் உடலமொன்று நேற்று முன்தினம் (01) மாலை மீட்கப்பட்டுள்ளதென நல்லத்தண்ணி வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி பிபாஸ் கருணாதிலக தெரிவித்தார்.

நோர்வூட், பிலிங்போனி தோட்டத்திலிருந்தே குறித்த சிறுத்தையின் உடலம் மீட்கப்பட்டதாகவும் தொழிலுக்குச் சென்ற தொழிலாளர்கள் வழங்கிய தகவலுக்கமையவே, இச்சிறுத்தையின் உடலம் மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உயிரிழந்தது ஆண் சிறுத்தை என்றும் குறித்த தோட்டத்தில் உலவும் மற்றுமொரு சிறுத்தையுடன் ஏற்பட்ட மோதலிலேயே இந்தச் சிறுத்தை உயிரிழந்திருக்கலாம் என, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிறுத்தையின் உடலம் நல்லதண்ணி வனஜீவராசிகள் திணைகளத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதி சுமக்கும் இருவருக்கிடையில் மோதல்

## ஒருவர் மரணம்

மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை, அம்பகஸ் பஸ் தரிப்பிடத்துக்கு அருகில், நாட்டாமை இருவருக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் (01) இரவு இடம்பெற்றுள்ளது.

மது போதையில் இருந்த இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தகராறே, கைகலப்பாக மாறி ஒருவர் தாக்கியதில் மற்றையவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தர் மாத்தளை, சுதுகங்கையைச் சேர்ந்த 37 வயதான தினேஸ் குமார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், தாக்குதலை மேற்கொண்ட மற்றைய நபர் மாத்தளை, விகாரை வீதியைச் சேர்ந்தவர். அவர் தற்போது, மாத்தளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மிளகாய்த்தூளை கரைத்து சிறுமிகள் மீது

# ஊற்றிய தாய் மாமன் கைது

சுமணசிறி குணதிலக

மொனராகலை, ஒக்கம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்டெமண்டிய பிரதேசத்தில் பாட்டியின் அரவணைப்பில் இருந்த இரண்டு பிள்ளைகளை கொடுமைப்படுத்திய, அப்பிள்ளைகளின் மாமா, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

13, 9 வயதுடைய சிறுமிகள் இருவரையும் கொடுமைப்படுத்திய குற்றச்சாட்டில், அப்பிள்ளைகளின் தாயின் உடன்பிறந்த சகோதரனான 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமிகளின் தந்தை, தாயையும் பிள்ளைகளையும் கைவிட்டுச் சென்றுள்ள நிலையில், தாய் கொழும்பில் பணி புரிந்து வருகிறார்.

**“ சிறுமிகளின் தந்தை, தாயையும் பிள்ளைகளையும் கைவிட்டுச் சென்றுள்ள நிலையில், தாய் கொழும்பில் பணி புரிகிறார். சிறுமிகள், பாட்டியின் பராமரிப்பில் இருந்து வந்த நிலையிலேயே குறித்த நபர், சிறுமிகளை கடுமையாகத் தாக்கி, மிளகாய்த் தூளை கரைத்து முகத்தில் ஊற்றியுள்ளார்**

இந்த நிலையில், சிறுமிகள் பாட்டியின் பராமரிப்பில் இருந்து வந்த நிலையிலேயே குறித்த நபர், சிறுமிகளை கடுமையாகத் தாக்கி, மிளகாய்த் தூளை கரைத்து முகத்தில் ஊற்றியுள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு வெல்லவாய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# சிவப்பு எச்சரிக்கை தொடர்பிலும் விழிப்பாகவே இருப்போம்

இரண்டொரு மாதங்களாக, நாடளாவிய ரீதியில் சீரற்ற வானிலை நிலவிவருகிறது. குளங்கள், நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிகின்றன, தாழ்நில பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. குறித்த காலப்பகுதியில், மழையுடனான வானிலையை அடுத்து ஏற்பட்ட மண்சரிவு மற்றும் இயற்கை அனர்த்தங்களில் சிக்கி, 14 பேர் உயிரிழந்துள்ளனர்; 22 பேர் காயமடைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட 42,233 குடும்பங்களைச் சேர்ந்த 151,214 பேர், உறவினர் வீடுகளிலும் பாதுகாப்பான இடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 432 வீடுகள் பகுதியளவிலும் 54 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. இந்தத் தரவுகள், நவம்பர் 25 ஆம் திகதி வரையிலான புள்ளிவிவரவியல் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டவை. அதன்பின்னர், சேதங்களும் அடைமழையின் தாக்கமும் குறைந்துள்ளன.

ஆனால், சேதமடைந்த வீடுகளை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய நிலைமைக்குள் பாதிக்கப்பட்ட மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். மொத்தத்தில் கூறுவதாயின், சிதைவுகளைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேகரித்து, ஆரம்பப் புள்ளியே இடப்படவேண்டும். வீட்டைக் கட்டுவதற்கான பொருட்களின் விலையை பார்க்குமிடத்து, கட்டுமானத்துக்கான சாத்தியங்கள் உடனடியாகக் கிடைக்காது என்பதே திண்ணம்.

கடந்த காலங்களில், இயற்கை அனர்த்தங்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள், சொத்திழப்புகள், சேதங்களை விடவும் இம்முறை ஓரளவுக்குக் குறைந்துள்ளன. ஆக, மக்களிடத்தில் சற்று விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. எனினும், இயற்கையின் மீதான சீண்டுதல்களைக் குறைத்திருந்தால், இன்னும் சில அழிவுகளைத் தவிர்த்து இருந்திருக்கலாம்.

வெள்ளம், மண்சரிவு, இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றைப் புதினம் பார்க்கச் சென்றவர்கள் மரணமடைந்த சம்பவம், இம்முறை பூஜ்ஜியமாகவே இருந்தது. அதனூடாகவும் சொல்பேச்சை மக்கள் கேட்டுள்ளனர் என அனுமானிக்கலாம்.

எனினும், மின்னல் தாக்கத்தால் சிற்சில சேதங்கள் ஏற்பட்டுள்ளன. காஸ் அடுப்புகள் வெடிக்கும் இக்காலத்தில், அடுப்புக்கும் காஸ் சிலிண்டருக்குமான குழாய் இணைப்பைத் துண்டித்து விடுவதைப்போல, இடி, மின்னல் காலங்களில், வீட்டு மின்சார சுற்றின் பிரதான ஆழியை நிறுத்திவிடுவதே சிறந்ததாகும். அடைமழையால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை, மீளவும் பண்படுத்தவேண்டும். அதனூடாகவே இப்போகத்தில் இழந்ததை, அடுத்த போகத்திலாவது பெற்றுக்கொள்ளமுடியும். எனினும், உரப்பிரச்சினைக்கு முறையான தீர்வு கிடைக்காமையால், பயிர்ச்செய்கைகளைக் கைவிடும் எண்ணத்திலேயே சில விவசாயிகள் உள்ளனர்.

மழையில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியவில்லை. அதற்கு அடுத்தபடியாக டெங்கு காய்ச்சல் தொடர்பில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், நமது சுற்றுச்சூழலை சுத்தப்படுத்தி, நீர் தேங்கியிருக்காத வகையிலான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

பொது இடங்களில் தேங்கியிருக்கும் மழைநீரை அப்புறப்படுத்தும் செயற்பாடுகளை, விடயதானத்துக்குப் பொறுப்பான உள்ளூராட்சி மன்றங்களின் கீழியங்கும் நிறுவனங்கள் முன்னெடுக்கவேண்டும். இல்லையேல், டெங்கு நுளம்புகள் பெருக்கெடுத்து, டெங்கு காய்ச்சலும் ஏற்படுத்துவிடும். ஆகையால், சிவப்பு எச்சரிக்கையை கவனத்தில் எடுத்து, சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருப்பதே காலத்தின் தேவையாகும்.





தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136



Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

வர்ணம் இல்லாத சித்திரமாக வாழ்க்கை அமைந்துவிடக்கூடாது. எங்களை நாங்களே வரைந்து கொள்வோமாக!

நாங்கள் விரும்பியபடி, சுதந்திரமாக வாழ்வது சந்தோஷமானது. ஆனால், ஆனால், அந்த வாழ்க்கையில் முன்னேற்றங்களையும் சாதனைகளையும் உருவாக்க வேண்டும். செயல் இன்றேல் எதுவுமே நடைபெறாது. மனிதர்கள் எந்த நேரத்திலும் எதற்கும், தன்னைத் தயார் நிலையில் வைத்திருக்கும் மனோநிலையில் இருக்க வேண்டும். இதுவும் வீரமான உணர்வுதான்.

நீங்கள் உயர்வு அடைய எவருக்கும் பயப்படத் தேவையில்லை. பதற்றமும் தயக்கமும் வேண்டியதில்லை. எங்கள் தேவைகள் எமக்குத்தான் தெரியும். பிறருக்கு எப்படிப் புரியும்? எமது வாழ்வில், எவரின் அநாவசியமான தலையீடுகளும் தேவையற்றவை.

ஆயினும், எங்களுக்கு எல்லாமே தெரியும் என மமதை கொள்ளல் ஆகாது. தேவையான விடயங்களில், தகுந்த விடயம் தெரிந்தவர்களிடம் அபிப்பிராயங்களைக் கேட்கலாம். வாழ்க்கையை சிருஷ்டிப்பது ஒரு கலை.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

2022க்கான முன்னோட்டம் - 1:

# ஒப்புதல் வாக்குமூலம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இன்னோர் ஆண்டு எம்மைக் கடந்து செல்கின்றது. 2020ஆம் ஆண்டு போலவே, 2021ஆம் ஆண்டையும் பெருந்தொற்றே நிறைத்தது. ஆனால், நாமும் மெதுமெதுவாகப் பெருந்தொற்றோடு வாழப் பழகி வருகிறோம். மாற்றங்களுக்கு இசைவாக்கமடைவதே மனிதகுலத்தின் மாண்பு என்பதை, நாம் இன்னொருமுறை நிரூபித்திருக்கிறோம்.

உலகம் மாற்றமடைகிறது; பத்தாண்டுகளுக்கு முன்னர் இருந்த உலகில் நாம் இப்போது இல்லை. உலகில் புதிய சக்திகள் மேலெழுந்துள்ளன; புதிய விடயங்கள் முன்னிலை அடைந்துள்ளன. எனவே, உலகை விளங்கிக்கொள்வதற்குப் புதிய சட்டகங்கள் தேவைப்படுகின்றன.

2022ஆம் ஆண்டை எதிர்பார்த்து நிற்கும் இந்தத் தருணத்தில், அயலுறவுகளையும் அதிகாரப் போட்டிகளையும் விளங்கிக் கொள்ள முனைவது பயனுள்ளது. இலங்கை மக்கள் தீவில் சீவித்தாலும், தனித்தியங்க இயலாதபடி உலக அலுவல்களில் நாம் இழுபடுவது தவிர்க்கவியலாதது.

அமெரிக்கா நினைத்தால், ஒரே இரவில் தமிழர்களுக்குத் தீர்வைத் தந்துவிடும் என்று நம்புகிறவர்கள் இருக்கிறார்கள். இந்தியா மனதுவைத்தால் தமிழர்களுக்கான தீர்வை யாரும் தடுக்கவியலாது என்று இன்னமும் பேசியும் எழுதியும் வருவோர் பலருளர்.

தமிழருக்கான தீர்வு, மேற்குலகின் தலைநகரங்களிலேயே இருக்கிறது என்று நம்புவோர், இலங்கையிலும் புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் கணிசமாக இருக்கிறார்கள்.

இவர்கள் யாரும், இலங்கையின் வரலாற்றைப் பற்றியோ, அவர்கள் நம்பிக்கை வைக்கும் நாடுகளின் நடத்தை பற்றியோ அறியும் ஆவலோ, அக்கறையோ அற்றவர்கள். அவர்கள் நினைப்பது சரியா, தவறா, சாத்தியமா, இல்லையா போன்ற கேள்விகளுக்கு உட்பட்டதில்லை. இக்கேள்விகளை எழுப்புவோர், துரோகிகள் என்று அழைக்கப்படுவர். அத்துரோகிகளை 'லைட்போஸ்டில்' கட்டித் தூக்க இயலவில்லை என்ற கவலை அவர்களுக்கு உண்டு. ஆனால், உலகம் மாறிவிட்டது.

புலம்பெயர்ந்தோரில் கணிசமானோருக்கு, அவர்கள் புலம்பெயர்ந்த காலத்தோடு இலங்கை நின்றுவிட்டது. அவர்கள் புலம்பெயரும்போது இருந்த அரசியல் சமூகப் பொருளாதாரச் சட்டகத்தை மையமாகக் கொண்டே அவர்கள், தங்கள் கருத்தாக்கங்களை உருவாக்குகிறார்கள். கொழும்பில் இருந்து 'காப்பெட்' போட்ட ஏ-9 வீதி வழியே, யாழ்ப்பாணம் சென்று திரும்பும் ஒருவர், "வடக்கு அபிவிருத்தியடைந்து விட்டது; கட்டடங்களும் வங்கிகளும் உணவகங்களும் வீதியின் இருமருங்கும் நிறைந்து கிடக்கின்றன. எனவே, மக்கள் வாழ்வு மகத்தானதாக உள்ளது" என்று சொல்வதற்கும் புலம்பெயர் அலப்பறைகளுக்கும் அதிக வித்தியாசம் இல்லைத்தான்.

இலங்கையில் மோசமடைந்துவரும் பொருளாதார நிலைமைகள் பற்றிய உரையாடலில், புலம்பெயர் தேசத்தவர் ஒருவர் சொன்னார்: "எங்கட ஆக்களுக்குப் பரவாயில்லை; வெளிநாட்டு உதவி இருக்கு. அவங்களுக்குத் தான் கஷ்டம். நல்லதுதானே". 'ஒரு பானை சோற்றுக்கு, ஒரு சோறு பதம்' என்பதுபோல், புலம்பெயர் புரிதல்கள் இவ்வாறுதான் இருக்கின்றன.

அமெரிக்கா பற்றிய அளவுகடந்த நம்பிக்கை, இன்னமும் எம்மிடத்தில் உண்டு. ஆனால், கடந்த இரண்டு தசாப்தங்களில் உலக அலுவல்களில், அமெரிக்காவின் செல்வாக்கு வெகுவாகச் சரிந்துள்ளது. 1989இல் பேர்லின் சுவர் இடிக்கப்பட்டு, அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையிலான கெடுபிடிப்போர் முடிவுக்கு வந்தபோது, அமெரிக்க அரசியல் ஆய்வாளரான பிரான்சிஸ் புக்குயாமா, உலகின் முடிவை அறிவித்தார்.

1992ஆம் ஆண்டு வெளியான அவரது 'வரலாற்றின் முடிவும் இறுதி மனிதனும்' (*The End of History and the Last Man*) என்ற புத்தகம், உலகின் கவனத்தை ஈர்த்தது. இதில், 'மனிதனது தத்துவார்த்தப் பரிணாம வளர்ச்சி, அதன் இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டது. தாராளவாத ஜனநாயகமும் திறந்த சந்தை மைய முதலாளித்துவமுமே என்றென்றைக்கும் உரியதாக மாறும்' என்று புக்குயாமா குறிப்பிட்டுள்ளார்.

'சோவியத் ஒன்றியத்தின் தோல்வியோடு, சோஸலிசம் கல்லறைக்கு அனுப்பப்பட்டுவிட்டது. மேற்குலகில் நடைமுறையில் உள்ள தாராண்மைவாத முதலாளித்துவ ஜனநாயகமே, உலகின் இறுதியான அரசாட்சி வடிவம். அதன் முதன்மை அரங்காடியாக அமெரிக்கா திகழும். அமெரிக்காவின் முதன்மையான வகிபாகம், பல தசாப்தங்களுக்குத் திகழும்' எனவும் எதிர்வுகூறியிருந்தார்.

பிரான்சிஸ் புக்குயாமா, மேற்குலகால் கொண்டாடப்பட்ட ஒருவரானார். 'இவரது கருத்துகள், மார்க்ஸியத்தின் முடிவை முன்மொழிகின்றன' என, மேற்குலக ஊடகங்கள் போற்றின. சோசலிசத்துக்கு எதிரான எதிர்ப்பிரசாரத்திலும், அமெரிக்காவை சர்வவல்லமை படைத்த சக்தியாக முன்னெடுப்பதிலும் புக்குயாமாவின் கருத்துகள் முன்னிலையடைந்தன. 1990களில் உலகச் சட்டகத்தை விளங்கிக் கொள்வதற்கான பிரதான கோட்பாட்டாளராக புக்குயாமா மாறினார்.

அண்மையில், *Economist* சஞ்சிகையின் 2022ஆம் ஆண்டுக்கான சிறப்பிதழில் 'அமெரிக்கா மேலாதிக்கத்தின் முடிவு' (*The end of American hegemony*) என்ற தலைப்பில், புக்குயாமா ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அக்கட்டுரையில், 'எதிர்பார்ப்புக்கு மாறாக, அமெரிக்க மேலாதிக்கம் 20 ஆண்டுகளுக்கும் குறைவான காலமே நீடித்தது. 1989 இல் பேர்லின் சுவர் சரிவுடன் தொடங்கிய மேலாதிக்கம், 2007ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியோடு முடிவுக்கு வந்துவிட்டது. இக்காலப்பகுதியில் அமெரிக்கா, உலகளாவிய சமூகப் பொருளாதார அரசியல் தளங்களில் தலைமை வகித்தாலும், ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகளின் மீதான ஆக்கிரமிப்புகள், அமெரிக்காவுக்கு குழிபறித்தன. இராணுவபலத்தின் மீதான அளவுகடந்த நம்பிக்கையும் திறந்த சந்தைப் பொருளாதார சர்வதேச வர்த்தகத்தில் கொண்டுள்ள பாதிப்பு பற்றிய அக்கறையின்மையும், அமெரிக்காவின் இந்நிலைக்குக் காரணமாயுள்ளன' என்று குறிப்பிட்டுள்ளார்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், எந்த எதிர்வுகூறல்களுக்காகப் புக்குயாமா கொண்டாடப்பட்டாரோ, இன்று அதே எதிர்கூறல்கள் தவறானவை என்று, அவரே ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும் நிலைமைக்கு உலகம் மாறியுள்ளது. இதைப் புக்குயாமா எதிர்பார்த்திருக்க மாட்டார்.

ஆனால், யதார்த்தம் அவ்வாறுதானே இருக்கிறது! இன்னமும் தமிழர்களின் தலைவிதியை, அமெரிக்காவிடம் ஒப்படைத்து விட்டு, காத்துக்கிடக்கச் சொல்கிறவர்களை என்ன செய்வது?

அக்கட்டுரையில், புக்குயாமா சொன்ன இரண்டு விடயங்கள் முக்கியமானவை. முதலாவது, ஒபாமா தனது எட்டு ஆண்டுகால ஆட்சியில் முனைப்புடன் முன்னெடுத்த 'ஆசியாவை முன்னிலைப்படுத்தல்' (*Pivot of Asia*) தோல்வியடைந்தது. ஆசியாவில், புதிய அரங்காடிகள் செல்வாக்குச் செலுத்துகிறார்கள். அமெரிக்கச் செல்வாக்கை மீள ஆசியாவில் நிறுவுவது இலகுவானதல்ல. அதற்கு ஜனாதிபதி ஜோ பைடன் தயாராக இருக்கிறாரா என்பதே கேள்வி.

இன்று அமெரிக்காவின் நெருக்கடி உள்ளார்ந்தது. அமெரிக்கச் சமூகம், முன்னெப்போதையும் விடப் பிளவடைந்ததாக உள்ளது. ஆழமடைந்துள்ள சமூகப் பிரிவினைகள், அமெரிக்க ஜனநாயகத்துக்கே சவாலாக உள்ளன. இதைச் சரிசெய்யாமல், உலக அலுவல்களில் கவனம் செலுத்த இயலாது.

புக்குயாமா சொல்கின்ற இரண்டாவது விடயம், உலகம் பல்மைய உலகமாக மாற்றமடைந்துள்ளது. சீனா, ரஷ்யா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன, புதிய அதிகார மையங்களாக உருவெடுத்துள்ளன. இது தவிர்க்கவியலாதது.

அமெரிக்காவின் தனிப்பெருந்தலைமை என்பது முடிவுக்கு வந்துள்ளது. அமெரிக்கா செய்யக்கூடியது, தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து, கூட்டுத்தலைமைக்கு முயல்வதாகும். அதற்கு, அமெரிக்கா தனது உள்நாட்டு நெருக்கடிகளைக் கையாள வேண்டும். அதற்கு கொவிட்-19 பெருந்தொற்று பெரும் தடையாக உள்ளது.

தமிழ் மக்களின் எதிர்காலத்தை, அமெரிக்காவின் கைகளில் தனிப்பெருந்தலைமை கொடுத்துவிட்டு அமைதியாக இருக்க முடியுமா என்பது முதலாவது கேள்வி.

அமெரிக்கா நினைத்தாலும், இலங்கை அலுவல்களில் செல்வாக்குச் செலுத்தும் வல்லமை உள்ளதா என்பது இரண்டாவது கேள்வி. தமிழர்களுக்காக அமெரிக்கா ஏன் குரல் கொடுக்க வேண்டும் என்பது மூன்றாவது கேள்வி.

இந்தக் கேள்விகளுக்கான விடைகளை, நாம் இதயசுத்தியோடும் நடைமுறை அனுபவங்களின் ஊடும் முதலில் நோக்குவோம்.

ஜெனிவாவை நோக்கிய 'காவடி'கள், ஆண்டுதோறும் தவறாமல் நடக்கின்றன. போர் முடிந்து 12 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ள நிலையில், நீதி கிடைத்துள்ளதா? உண்மை அறியப்பட்டுள்ளதா? உரிமைகள் மீட்கப்பட்டுள்ளனவா? மனித உரிமைகள் பேணப்பட்டுள்ளனவா? போன்ற கேள்விகளுக்கான பதிலை நாமறிவோம்.

இலங்கை மீதான அதிகாரச் சதுரங்கத்தில், வெறும் பார்வையாளர்களாகவே நாமிருக்கிறோம். எம்மை நாம் நம்புவதை விட, அயலாரை நம்புவதை நாம் விரும்புகிறோம். அயலார் வருகையின் அனுபவங்கள், எமக்கு இனிப்பானவையல்ல! ஆனாலும் அயலாரை நம்பும் மனநிலையை என்னவென்பது?

2022ஆம் ஆண்டு, புதிய ஆண்டாகினும் சவால்கள் பழையன. மாறும் உலகு பற்றிய முன்னோக்கு பயன்தரும். இலங்கை இன்னும் பாரிய பொருளாதார நெருக்கடியை நோக்கி நகர்கிறது. புலம்பெயர்ந்தவர்கள், 'சோறல்ல, சுதந்திரமே பிரதானம்' என்று உண்டு செரிக்க பேசிக்கொள்ளட்டும். அடுத்தவேளை சோற்றுக்கென்ன வழி என்பது குறித்து, நாம் சிந்திக்கத் தொடங்கலாம்.

## கடிதங்கள்

### இரட்டைவாய்க்கால் – சாலை வீதி:

### புனரமைக்குமாறு கோரிக்கை


முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான இரட்டைவாய்க்கால் சந்தியில் இருந்து, சாலை வரையான 13 கிலோ மீற்றர் தூரமான வீதியைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதி, மிக நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால், பொதுமக்கள், விவசாயிகள், மீனவர்கள், மாணவர்கள் என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம் உள்ளிட்ட கிராமங்களில் வசிக்கும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

குறித்த வீதியில் பாரிய குழிகள் காணப்படுவதால், பஸ் சேவைகள் இடம்பெறுவதில்லை. இதனால், தமது நிர்வாகத் தேவைகளுக்காக, முல்லைத்தீவு நகருக்கு செல்வதற்கு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

அத்துடன், மழை, கடல் சீற்றம் போன்ற இடர்க்காலத்தில், வீதியில் நீர் தேங்கி, போக்குவரத்தும் தடைப்படுகிறது. இந்த வீதி தொடர்பில், பல ஆண்டுகளாகக் குரல்கொடுத்தும், எந்தவிதமான தீர்வுகளும் இதுவரை வழங்கப்படவில்லை. ஆகவே, மிக விரைவில் குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு உரியதரப்பினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.


-சண்முகம் தவசீலன்



# நவம்பரில் பணவீக்கம் உயர்வு

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மீதான வருடாந்த மாற்றத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் அளவீட்டின் பிரகாரம், 2021 நவம்பர் மாதத்தில் நாட்டின் பணவீக்கம் (நாணயப் பெறுமதியின் வீழ்ச்சி) 9.9 ஆக அதிகரித்திருந்ததாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதிவாகியிருந்த உயர்ந்த பணவீக்கத்தைத் தொடர்ந்து, கடந்த 12 வருட காலப்பகுதியில் பதிவாகியிருந்த மிகவும் உயர்ந்த பணவீக்கமாக 2021 நவம்பர் மாத பெறுமதி அமைந்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“ 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதிவாகியிருந்த உயர்ந்த பணவீக்கத்தைத் தொடர்ந்து, கடந்த 12 வருட காலப்பகுதியில் பதிவாகியிருந்த மிகவும் உயர்ந்த பணவீக்கமாக 2021 நவம்பர் மாத பெறுமதி அமைந்துள்ளது. நாட்டின் பணவீக்க நிலைமை தொடர்பில், எளிமையாகப் புரிந்து கொள்ளவேண்டுமானால், 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நபர் ஒருவர் 100,000 ரூபாயை வருமானமாகப் பெற்றிருந்து, 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும் அந்தப் பெறுமதி மாறாமல் காணப்படுமாயின், இலங்கை மத்திய வங்கியால் அந்நபருக்கு 10,000 ரூபாய் சம்பளக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதாகும்.**




2021 ஒக்டோபர் மாதத்தில் இந்தப் பெறுமதி 7.6 சதவீதமாக காணப்பட்டது.

உணவு மற்றும் உணவு சாரா பண்டப் பிரிவுகளின் மாதாந்த விலை அதிகரிப்பின் அடிப்படையில் பண வீக்கம் மாறுபடுகின்றது.

அதன் பிரகாரம், உணவுப் பொருட்கள் சார்ந்த பண வீக்கம் என்பது, 2021 நவம்பர் மாதத்தில் 17.5 சதவீதமாக அதிகரித்துள்ளதுடன், 2021 ஒக்டோபர் மாதத்தில் 12.8 சதவீதமாகக் காணப்பட்டது. உணவுப் பொருட்கள் சாராத பண வீக்கம் 2021 நவம்பர் மாதத்தில் 6.4 சதவீதமாகவும், 2021 ஒக்டோபர் மாதத்தில் 5.4 சதவீதமாகவும் காணப்பட்டது.

நாட்டின் பணவீக்க நிலைமை தொடர்பில், பொது மக்கள் எளிமையாகப் புரிந்து கொள்வதற்கு சாராம்சப்படுத்தப்படுமானால், 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கையில் நபர் ஒருவர் 100,000 ரூபாயை வருமானமாகப் பெற்றிருந்து, 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும் அந்தப் பெறுமதி மாறாமல் காணப்படுமாயின், இலங்கை மத்திய வங்கியால் அந்நபருக்கு 10,000 ரூபாய் சம்பளக் குறைப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்தப் பண வீக்கத்தினூடாக உணர்ந்து கொள்ள முடியும் என துறைசார் நிபுணர் ஒருவர் விளக்கமளித்திருந்தார்.

# நெஸ்லே நிறுவனத்துக்கு நான்கு விருதுகள்




நெஸ்லே லங்கா நிறுவனம் 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த நிலைபேண்தகைமை பேணும் நிறுவனத்திற்கான விருதுகளில் நான்கு விருதுகளைத் தனதாக்கியுள்ளது.

பூமி என்ற பிரிவின் கீழ் பூமிக்கு நன்மை செய்வதில் அதன் வலுவான முயற்சிகளுக்கு கிடைத்துள்ள அங்கிகாரமாக, சுற்றுச்சூழல் மீது நிறுவனத்தின் அர்ப்பணிப்பு, வணிகத்திற்கு அப்பாற்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேண்தகைமைக்காக சமூகம்-பூமி-இலாபம் ஆகியவற்றில் சிறந்த மும்முனைப் பெறுபேறுகளுக்கான விருது ஆகிய பிரிவுகளில் வென்றுள்ளது.

2021 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் சிறந்த 10 நிறுவனங்களில் ஒன்று என்ற விருதையும் நெஸ்லே லங்கா நிறுவனம் பெற்றுள்ளது. இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்ற இந்த மதிப்புமிக்க வருடாந்த நிகழ்வானது, மக்கள், பூமி, இலாபம் ஆகிய மும்முனை இலக்குடனான செயற்றிறனை அடைவதில் நிறுவனத்தின் முயற்சிகளுக்காக நிலைபேண்தகைமையில் முன்னின்று செயற்படும் நிறுவனங்களை அங்கிகரிக்கிறது.

நல்லுணவு, நல்வாழ்வுக்கான நிறுவனம் நாட்டின் முதல் 10 சிறந்த வர்த்தக நிறுவனங்கள் மத்தியில் அங்கிகரிக்கப்படுகின்றமை தற்போது ஏழாவது ஆண்டாகும்.

நெஸ்லே நிறுவனம் இலங்கையின் சிறந்த நிறுவனமாக இரண்டு முறை முடிசூடியுள்ளதுடன், நாட்டிற்கு ஆற்றி வருகின்ற நேர்மறையான பங்களிப்பிற்கான இனங்காணல் அங்கிகாரமாக, சமூக உறவுகள், பணியாளர்கள் உறவுகள், வாடிக்கையாளர் உறவுகள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய இந்த மதிப்புமிக்க நிகழ்வில் கடந்த காலங்களில் தொடர்புடைய பிரிவு, துறை மற்றும் சிறப்பு செயற்திட்டங்களுக்கான 18 விருதுகளை வென்றுள்ளது.

சிறந்த நிலைபேண்தகைமை பேணும் நிறுவனத்திற்கான விருதுகள் இலங்கையின் மிக உயர்ந்த நிறுவனரீதியான கௌரவமாக பரவலாகக் கருதப்படுகிறது. இது உள்நாட்டு பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கு சிறந்த வகையில் பங்களிப்பாற்றுகின்றவர்களையும், நிறுவன நிலைபேண்தகைமையில் சிறந்த செயல்திறன் கொண்டவர்களையும் அங்கிரிக்கிறது. இதற்கான நுழைவு விண்ணப்பங்கள் உள்நாட்டு வல்லுநர்களைக் கொண்ட மிகவும் மரியாதைக்குரிய நடுவர் அணியால் மதிப்பீடு செய்யப்படுகின்றன.



# உண்டியலில் பணம் வந்தால் கிடைக்காதாம்

வெளிநாடுகளிலிருந்து உண்டியல் போன்ற சட்ட விரோதமான முறைகளில் நாட்டுக்கு பணத்தை அனுப்புதல், விநியோகித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அந்தப் பணத்தை அரசாங்கம் பறிமுதல் செய்வதற்கான நடவடிக்கை உடனடியாக அமலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

**“ இம் மாதம் வெளிநாடுகளிலிருந்து வங்கிக் கட்டமைப்புகள் மற்றும் இதர சட்ட ரீதியான வழிமுறைகளினூடாக இலங்கைக்கு அனுப்பப்படும் ஒவ்வோர் அமெரிக்க டொலருக்கும் மேலதிகமாக 10 ரூபாயை கொடுப்பனவாக வழங்க இலங்கை மத்திய வங்கி முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளது**

வெளிநாடுகளில் பணிபுரிவோர் மற்றும் வசிக்கும் இலங்கையர்கள், இலங்கைக்கு பணத்தை அனுப்பும் போது, சட்ட ரீதியாக காணப்படும் முறைகளை மாத்திரம் பயன்படுத்தி பணத்தை அனுப்புமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

உத்தியோகப்பற்றற்ற முறையில் நாட்டினுள் வரும் வெளிநாட்டு பண அனுப்புகைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் பணிகளை அதிகாரத் தரப்பினர் முன்னெடுப்பதாக ஆளுநர் தெரிவித்தார். அதனூடாக இவ்வாறான நடவடிக்கைகளை இடைநிறுத்தும் வகையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

வெளிநாட்டு பண அனுப்புகைகளை மேற்கொள்வதற்கு பல சட்டபூர்வமான வழிமுறைகள் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் முறைகளை மாத்திரம் பயன்படுத்துமாறு ஆளுநர் மக்களிடம் கேட்டுக் கொண்டார்.

இம் மாதம் வெளிநாடுகளிலிருந்து வங்கிக் கட்டமைப்புகள் மற்றும் இதர சட்ட ரீதியான வழிமுறைகளினூடாக இலங்கைக்கு அனுப்பப்படும் ஒவ்வோர் அமெரிக்க டொலருக்கும் மேலதிகமாக 10 ரூபாயை கொடுப்பனவாக வழங்க இலங்கை மத்திய வங்கி முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளது.

புதுடெல்லி

பெரியவர்கள் வீட்டிலிருந்து வேலை செய்ய,

# குழந்தைகள் மட்டும் பள்ளிக்கு செல்வதா?

## உச்சநீதிமன்றம் கேள்வி



புதுடெல்லியில் காற்று மாசு அதிகரித்து வரும் நிலையில், பெரியவர்கள் வீட்டிலிருந்து வேலை செய்ய, குழந்தைகள் மட்டும் பள்ளிக்கு செல்வதா என உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

புதுடெல்லியில் காற்று மாசு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இது தொடர்பான வழக்கை உச்சநீதிமன்றம் விசாரித்து வருகிறது. தொடர்ந்து 4 வாரங்களாக நடைபெற்று வரும் இந்த வழக்கு விசாரணை, நேற்றும் (02) தலைமை நீதிபதி என்.வி.ரமணா அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது தலைமை நீதிபதி கூறியதாவது: புதுடெல்லியில் காற்று மாசுபாடு அதிகரித்து வருவதாக அரசு கூறினாலும், கடந்த சில வாரங்களாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன. மாசு தொடர்ந்து அதிகரித்து வருகிறது; நேரம் மட்டுமே வீணாகிறது. புதுடில்லி அரசாங்கம் இன்னும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். காற்று மாசு அதிகரித்துவரும் நிலையில், பள்ளிகளை திறந்திருப்பது ஏன்? 3, 4 வயது குழந்தைகள் பள்ளிக்கு செல்கின்றனர். ஆனால், பெரியவர்கள் வீட்டில் இருந்து வேலை செய்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

இதற்குப் பதிலளித்த புதுடில்லி அரசாங்கத்தின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி, “பள்ளிகளைத் திறக்கவில்லை எனில் குழந்தைகள் கற்பதை மறக்க நேரிடும் எனப் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். விருப்பப்பட்டால் ஒன்லைன் வாயிலாகவும் பாடங்களைக் கற்கலாம் எனக் கூறியே பள்ளிகளை திறந்தோம்” எனக் கூறினார்.

அப்போது குறிக்கிட்ட தலைமை நீதிபதி ரமணா, “இதை விருப்பத்திற்கு விட்டுவிட்டீர்கள் என்று சொல்கிறீர்கள். ஆனால் யார் வீட்டில் உட்காருவார்கள்? எங்களுக்கும் குழந்தைகள், மற்றும் பேரக்குழந்தைகள் உள்ளனர். தொற்றுநோய் பரவல் காலத்தின் தொடக்கத்திலிருந்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் எங்களுக்குத் தெரியும். உங்களுக்கு 24 மணிநேரம் அவகாசம் தருகிறோம். அதற்குள் நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நாங்கள் நாளை கடுமையான நடவடிக்கை எடுப்போம்” எனக் காட்டமாக கூறினார்.



கோவை

# தேயிலை மலைகளில் யானைகள்

கோவை மாவட்டம் பொள்ளாச்சியை அடுத்துள்ள வால்பாறை பகுதி தேயிலை தோட்டத்தில் திடீரென ஒரே இடத்தில் 40க்கும் மேற்பட்ட யானைகள் புகுந்ததைக் கண்டு தேயிலை பறிக்கும் தொழிலாளர்கள் அச்சமுற்று ஓடினர். முத்துமுடி என்னும் எஸ்டேட்டுக்குள் வனப்பகுதியில் இருந்து திடீரென 40 க்கும் மேற்பட்ட காட்டு யானைகள் புகுந்தன. யானைகள் கூட்டமாக தேயிலை தோட்டத்திற்குள் வருவதைப் பார்த்த தோட்டத் தொழிலாளர்கள் அலறி அடித்து ஓட்டம் பிடித்தனர். இதனால் அப்பகுதியில் தேயிலை பறிக்கும் தொழில் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. உடனடியாக வனத்துறைக்கு தகவல் கொடுக்கப்பட்டதை அடுத்து விரைந்து வந்த வனத் துறையினர் யானைகளின் நடமாட்டத்தை கண்காணித்து வருகின்றனர்.

சேலம்

அ.தி.மு.கவுக்குள் சசிகலாவுக்கு

# அனுமதி இல்லை



அண்ணா திராவிட முன்னேற்ற கழக கொடியை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்பது போலத்தான் அ.தி.மு.க கொடியை சசிகலா பயன்படுத்துகிறார் என்றும் அ.தி.மு.கவுக்குள் சசிகலாவை அனுமதிக்க மாட்டோம் எனவும் அ.தி.மு.க அமைப்புச் செயலாளர் பொன்னையன் கூறியுள்ளார்.

இது குறித்து சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பொன்னையன், சித்திரை ஒன்றை தமிழ் புத்தாண்டாக தமிழக அரசு அறிவிக்க உள்ளது. இதனை மக்கள் ஏற்க மாட்டார்கள்.

அ.தி.மு.கவுக்கள் சசிகலாவை அனுமதிக்க மாட்டோம். சசிகலா அ.தி.மு.கவின் அடிப்படை உறுப்பினர் கூட கிடையாது. ஜெயலலிதா இருந்த போதே சசிகலாவையும் அவருடைய குடும்பத்தையும் வீட்டில் இருந்து ஒதுக்கி வைத்தனர் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்ற வளாகத்தில்

# திடீர் தீ விபத்து



புதுடெல்லியில், பாராளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடர் கடந்த 29 ஆம் திகதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நேற்று (2) காலை நாடாளுமன்ற வளாகத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து தீயணைப்புத் துறை அதிகாரிகளுக்கு உடனடியாக தகவல் அளிக்கப்பட்டது. இதன்படி சம்பவ இடத்திற்கு தீயணைப்புத் துறை அதிகாரிகள் விரைந்து வந்தனர். துரிதமாகச் செயற்பட்ட தீயணைப்பு வீரர்கள், தீயை அணைத்தனர். இந்தத் தீ விபத்தில் யாருக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# தனஞ்சய சதம்: முன்னிலையில் இலங்கை

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் தனஞ்சய டி சில்வா பெற்ற சதத்துடன் இலங்கை முன்னிலையில் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தை, தமது இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட்களை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இலங்கை, குறிப்பிட்ட நேரத்தில் சரித் அஸலங்கவை வீராசாமி பெருமாளிடம் இழந்தது.

பின்னர், பதும் நிஸங்க, தனஞ்சய டி சில்வாவின் இணைப்பில் இனிங்ஸை இலங்கை கட்டியெழுப்பிய நிலையில், 66 ஓட்டங்களுடன் றொஸ்டன் சேஸிடம் நிஸங்க வீழ்ந்ததோடு, அடுத்து வந்த தினேஷ் சந்திமாலும் சிறிது நேரத்திலேயே சேஸிடம் வீழ்ந்திருந்தார்.

இதையடுத்து வந்த ரமேஷ் மென்டிஸின் இணைப்பில் டி சில்வா ஓட்டங்களைச் சேர்த்த நிலையில், 25 ஓட்டங்களுடன் அணித்தலைவர் கிறேய்க் பிறத்வெய்ட்டிடம் மென்டிஸ் ஆட்டமிழந்திருந்தார்.

தொடர்ந்து வந்த சுரங்க லக்மால், அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோர் உடனேயே பெருமாளிடம் வீழ்ந்திருந்தனர். இதையடுத்து, லசித் எம்புல்தெனியவின் இணைப்பில் தொடர்ந்தும் டி சில்வா ஓட்டங்களைப் பெற்று வருகையில் நேற்றைய நான்காம் நாள் முடிவில் தமது இரண்டாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுகளை இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் டி சில்வா 153, மென்டிஸ் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் காணப்படுகின்றனர்.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 204/10 (துடுப்பாட்டம்: பதும் நிஸங்க 73, திமுத் கருணாரத்ன 42, அஞ்சலோ மத்தியூஸ் 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: வீராசாமி பெருமாள் 5/35, ஜோமெல் வொரிக்கான் 4/50, றொஸ்டன் சேஸ் 1/64)

மேற்கிந்தியத் தீவுகள்: 253/10 (துடுப்பாட்டம்: கிறேய்க் பிறத்வெய்ட் 72, ஜெர்மைன் பிளக்வூட் 44, கைல் மேயர்ஸ் ஆ.இ 36, என்குருமாஹ் பொன்னர் 35 ஓட்டங்கள். பந்துவீச்சு: ரமேஷ் மென்டிஸ் 6/70, பிரவீன் ஜெயவிக்கிரம 2/59, லசித் எம்புல்தெனிய 2/94)

இலங்கை: 328/8 (தனஞ்சய டி சில்வா ஆ.இ 153, பதும் நிஸங்க 66, லசித் எம்புல்தெனிய ஆ.இ 25, ரமேஷ் மென்டிஸ் 25 ஓட்டங்கள். பந்துவீச்சு: வீராசாமி பெருமாள் 3/100, றொஸ்டன் சேஸ் 2/82, கிறேய்க் பிறத்வெய்ட் 1/11)



துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில்

## ஏழாமிடத்துக்கு முன்னேறிய திமுத்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் ஏழாமிடத்துக்கு இலங்கையணியின் தலைவர் திமுத் கருணாரத்ன முன்னேறியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 230 ஓட்டங்களைப் பெற்றதைத் தொடர்ந்தே 11ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தை கருணாரத்ன அடைந்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 147 ஓட்டங்களைப் பெற்ற நியூசிலாந்தின் டொம் லேதம், 14ஆம் இடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி ஒன்பதாமிடத்தை அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு:

ஜோ றூட், 2. ஸ்டீவ் ஸ்மித், 3. கேன் வில்லியம்ஸன், 4. மர்னுஸ் லபுஷைன், 5. றோஹித் ஷர்மா, 6. விராட் கோலி, 7. திமுத் கருணாரத்ன, 8. பாபர் அஸாம், 9. டொம் லேதம், 10. டேவிட் வோணர்.

இதேவேளை, பங்களாதேஷுக்கெதிரான முதலாவது டெஸ்டில் ஏழு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து பந்துவீச்சாளர்களின் தரவரிசையில், எட்டாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தை பாகிஸ்தானின் ஷகீன் ஷா அஃப்ரிடி அடைந்துள்ளார்.

இந்நிலையில், இந்தியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் ஆறு விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நியூசிலாந்தின் கைல் ஜேமிஸன், ஒன்பதாமிடத்தை அடைந்துள்ளார்.



## பூப்பந்தாட்ட நடுவராக எம்.என்.எம் சரீக்

ஸ்ரீ லங்கா பூப்பந்தாட்ட சங்கம் 69ஆவது தடவையாக கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இம்மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரை நடத்தவுள்ள பூப்பந்தாட்டத் தொடருக்கு நடுவர்களில் ஒருவராக புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி உதவி அதிபர் எம்.என்.எம் சரீக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
எம்.யூ.எம். சனூன்

தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில்

## கல்முனை தேசிய இளைஞர் கழக வீரர்

எம். என். எம். அப்ராஸ்

அம்பாறை மாவட்ட இளைஞர் கழக சம்மேளத்தால், அட்டாளைச்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மாவட்ட ரீதியாக இடம்பெற்ற 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில், மைதான நிகழ்ச்சிகளின் ஒன்றான தட்டெறிதலில் கல்முனை தேசிய இளைஞர் கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட எஸ்.எ. ஆஜில் முதாலமிடத்தைப் பெற்றுக் கொண்டதுடன், தேசிய ரீதியில் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் இடம்பெறும் போட்டியில் கலந்துகொள்ளவுள்ளார்.



கிரீஸ்

தடுப்பூசி செலுத்த மறுத்தால்

# மாதந்தோறும் அபராதம்

கிரீஸ் நாட்டில் முதியவர்கள் தடுப்பூசி செலுத்தி கொள்ள மறுத்தால், அவர்களுக்கு மாதந்தோறும் அபராதம் விதிக்கப்படும் என அந்நாட்டு பிரதமர் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "நாட்டில் உள்ள 60 வயதுக்கு மேற்பட்ட மக்கள் அனைவரும், வரும் ஜனவரி மாதம் 16ஆம் திகதிக்குள் முதல் தவணை தடுப்பூசியை செலுத்திக்கொள்ள பதிவு செய்துவிட வேண்டும். இல்லையெனில், அவர்கள் மாதந்தோறும் 100 யூரோக்கள் அபராதம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும்" என்றார்.

புதிய கொரோனா மாறுபாடு பரவி வருவதாலும், பனிக்காலம் நெருங்குவதாலும், அந்நாட்டு அரசு இவ்வாறு அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இது அதிக அபராதம் என்றும் முதியவர்களுக்கு ஓய்வூதியமே 730 யூரோக்கள் தான் என்றும் சிலர் குற்றம்சாட்டி வருகிறமை குறிப்பிடத்தக்கது.



கியூபா

## 'பிடல் காஸ்ட்ரோ' அருங்காட்சியகம் திறப்பு

கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தலைநகர் ஹவானாவில் பிரமாண்ட அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது.

அங்கு சீன ஜனாதிபதி ஜின்பிங்கால் பரிசளிக்கப்பட்ட காஸ்ட்ரோவின் மார்பளவு சிலை, அவர் அணிந்திருந்த இராணுவ சீருடை, வலம் வந்த ஜீப் என காஸ்ட்ரோ பயன்படுத்திய ஏராளமானப் பொருட்களும் புகைப்படங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், காஸ்ட்ரோவின் கம்யூனிஸ சித்தாந்தங்களை விளக்கும் விதமாகத் திறந்தவெளி அரங்கம், பிரமாண்ட நூலகம் மற்றும் புத்தக கடைகளும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜேர்மனி

2ஆம் உலகப் போரில் வீசப்பட்டிருந்த

## குண்டு வெடித்தது

உலக போர் முடிவடைந்து 76 ஆண்டுகள் கடந்தும் தற்போதும் ஜேர்மனியில் வெடிக்காத வெடிகுண்டுகள் அவ்வப்போது கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ஜேர்மனியில் உள்ள *Donnersbergerbruecke* என்ற ரயில் நிலையம் அருகே நேற்று முன்தினம் (01) 2ஆம் உலகப் போரின்போது வீசப்பட்ட 250 கிலோ கிராம் எடை கொண்ட வான்வழி குண்டொன்று வெடித்துள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரயில் நிலையத்திற்கு வெளியே இடம்பெற்ற கட்டுமான பணியின்போதே இவ்வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளதாகவும், இதில் நால்வர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



இஸ்ரேல்

## உலகில் அதிக செலவு மிகுந்த நகரம்

உலகில் மக்கள் வாழ அதிக செலவாகும் நகரம் குறித்து அண்மையில் கருத்துக் கணிப்பொன்று நடத்தப்பட்டது.

இக் கருத்துக் கணிப்பில் கடந்த ஆண்டில் முதலிடம் வகித்த பாரிஸ், சுரிச், ஹொங்கொங் நகரங்கள் முன்னிலை வகிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் சற்றும் எதிர்பாராத வகையில் இஸ்ரேல் நாட்டிலுள்ள டெல் அவிவ் நகரம் முதலிடத்தைப் பிடித்துக்கொண்டதோடு பாரிஸ், சிங்கப்பூர் ஆகிய நகரங்கள் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டன.

உலகில் அதிகரித்து வரும் பண வீக்கத்தால் போக்குவரத்துக்கான செலவு அதிகரித்துள்ளது. மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பொருட்களின் விலை 3.5 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

இதற்கு கொரோனாத் தொற்றுப் பரவலும் அதற்கான பொது ஊரடங்கும் ஒரு காரணமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் போக்குவரத்து செலவு அதிகம். இதனால் பொருட்களின் விலையும் அதிகமாக உள்ளது. கடந்த முறை எடுக்கப்பட்ட கணக்கெடுப்பில் டெல் அவீவ் ஐந்தாவது இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தென் கொரியா


## பறக்கும் டக்ஸி

தென் கொரியா 2025 ஆம் ஆண்டில் முதல் நகர்ப்புற விமான போக்குவரத்து சேவையை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விமானப் போக்குவரத்து சேவைக்காக முதன் முறையாக எயார் டக்ஸி (*Air Taxi*) விமானம் ஒன்றை அந்நாட்டு அரசு மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தியுள்ளது.

தலைநகரான சியோலில் உள்ள ஒரு விமான நிலையத்தில், தென் கொரியாவின் போக்குவரத்து அமைச்சின் சார்பில் குறித்த ட்ரோன் விமானம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மின்சாரத்தின் மூலமாக இயங்கும் இவ்விமானம் செங்குத்தாக தரையிறங்கக் கூடியது எனவும் வருங்காலத்தில் இதனை தரைவழிப் போக்குவரத்தில் இணைக்க முடியும் எனவும் அந்நாட்டு அரசு நம்பிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 23 நாடுகளில் ஒமிக்ரான்



கடந்த வாரம் தென் ஆபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட ஒமிக்ரான் வகை கொரோனா வைரஸ் தொற்றானது அமெரிக்கா, பிரித்தானியா, இத்தாலி, ஜப்பான், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, கனடா, சவூதி அரேபியா, நைஜீரியா உள்ளிட்ட 23 நாடுகளில் பரவியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

மேலும் டெல்டா வகை கொரோனாவை விட ஒமிக்ரான் வகை மிகவும் ஆபத்தானது எனவும் இத்தொற்றானது அதிவேகமாகப் பரவி வருவதால் பாதிக்கப்படும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வெள்ளிக்கிழமை, 03 டிசெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.